பக்கங்கள்: 20

# தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:44 25.02.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



மகா மனிதனை எதிர்பார்க்கும் தமிழ் மக்கள்

சி.அ.யோதிலிங்கம்

பக்கம் 06



சீக்கியர்களின் அபிலாசைகள்

லோகன் பரமசாமி

பக்கம் 09



வர்மா

# ரணிலின் ராஜதந்திரமா?

# குள்ள நரியின் தந்திரமா?

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற கேள்விக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெள்ளத்தெளிவாகப் பதிலளித்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் தமது பலத்தைக் காட்டலாம் எனக் காத்திருந்த அரசியல் தலைவர்கள் கொதித்துப் போயுள்ளனர். தேர்தலைச் சந்திக்காமல் ஜனாதிபதியானவரிடம் ஜனநாயகத்தை எதிர்பார்ப்பது முட்டாள்த்தனமானது.

தேர்தல் சட்டபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசினார். தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை. அது ஒத்திவைக்கப்படுவதற்கு முதலில் தேர்தல் இல்லை. தமக்குத் தெரிந்தபடி இதுவரை தேர்தலுக்கான நிலையான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் எனவே தேர்தலை நடத்துவது குறித்து சட்ட படியான முடிவு எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார். தலைவரும் ஒரு உறுப்பினரும் மட்டுமே தேர்தலை நடத்த முடிவு செய்ததாகவும் மற்றவர்கள் வாக்கெடுப்பில் வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் கூறுகிறார். தேர்தல் தொடர்பான தீர்மானத்தை தலைவர் நிமல் புஞ்சிஹேவா மற்றும் உறுப்பினர் எம்.எம்.மொஹமட் மட்டும் எடுத்ததாகவும் மீதமுள்ள மூன்று உறுப்பினர்களின் ஒப்புதல் மட்டுமே ஜூம் மூலம் எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

“தேர்தல் நடத்துவதற்கான முடிவு தலைவர் மற்றும் எம்.எம். மொஹமட் ஆகியோரால் எடுக்கப்பட்டது என்பதே இதன் பொருள். பின்னர் அவர் (புஞ்சிஹேவா) மற்றவர்களைத் தொடர்பு கொண்ட பின்னர் அவர்களின் சம்மதம் பெறப்பட்டதாக கூறுகிறார். மற்ற மூவரிடமும் கேட்டால் அவர்களின் நிலைப்பாடு இதுவாக இருக்காது. அதற்கான ஆதாரத்தையும் என்னால் வழங்க முடியும். பின்னர் தேர்தலை நடத்துவது குறித்து உத்தியோகபூர்வ முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை” என்று அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதியின் அறிவிப்பு குழப்பமாகவே உள்ளது. தேர்தலை நடத்தவிடாது தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தேர்தல் நடத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி ஒரு பாதையிலும் தேர்தல்கள் ஆணையம் இன்னொரு பாதையிலும் பயணம் செய்தன. உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற பட்டிமன்றம் ஒரு புறம் இருக்க எல்லாக் கட்சிகளைப் போன்றே ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பணத்தைக் கட்டியது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பெயர் கொடுத்த அரச ஊழியர்கள் மூன்று மாத சம்பளமற்ற விடுமுறை எடுத்துள்ளார்கள். தேர்தல் நடைபெறவில்லை என்றால் அவர்களின் நிலை என்ன என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை. நாடு இருக்கின்ற நிலைமையில் தேர்தலை நடத்தப் பணம் இல்லை எனக் கைவிரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை தாமதப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பாராளுமன்றத்திலும் வெளியேயும் பலத்த எதிர்ப்பு காட்டப்படுகிறது. ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் தமது அரசியல் நலனுக்காகவே போராட்டங்களை நடத்துகின்றன.

▶19

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# உக்ரைனில் அமெரிக்க ஜனாதிபதி

# அதிர்ச்சியில் ரஷ்யா



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஒரு வருடம் முழுமையாக முடிந்து விட்டது. கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியது. இந்த ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மிகவும் இரகசியமான முறையில் உக்ரைனுக்குச் சென்றார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியுடன் ஜோ பைடன் வீதியில் நடந்து செல்லும் புகைப்படங்கள் ரஷ்யாவுக்கு விடப்படும் எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது. உக்ரைனில் அகதிகள் இருக்கும் சாலைகள் வழியாக இவர்கள் இருவரும் சாதாரண மக்கள் போல நடந்து சென்றனர். ரஷ்யாவுக்கு ஆதரவாக பெலாரஸ் போர்க்களத்தில் இருக்கிறது. சீனா, வட கொரியா ஆகியனவும் ரஷ்யாவின் பக்கம் உள்ளன. ஏனைய நாடுகள் தேவையான போர்த்தளபாடங்களையும் வேறு பல உதவிகளையும் உக்ரைனுக்கு வழங்குகின்றன.

உக்ரைனின் கதையை சுலபமாக முடித்து விடலாம் என இறுமாப்படைந்த ரஷ்ய ஜனாதிபதி புடின் அதிர்ச்சியடைந்துள்ளார். ரஷ்யப் படைகள் கைப்பற்றிய இடங்களை உக்ரைன்படைகள் மீண்டும் பறித்தெடுத்தன. இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என புடின் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் தொடங்கியது. நேட்டோ படையில் உக்ரைன் இணைவதைத் தடுக்கும் வகையிலும் உக்ரைனில் அமெரிக்க இராணுவத் தளபாடங்கள் அமைக்கப்படுவதை எதிர்க்கும் வகையிலும் ரஷ்யா திடீரென உக்ரைன் மீது போர் தொடுத்தது. முதல் 3 மாதங்கள் தீவிரமாக நடந்த போர் தற்போது விட்டு விட்டு நடத்தப்பட்டு வருகிறது. இரண்டு நாடுகளுமே போரில் பெரிய அளவில் முன்னேற்றம் அடையவில்லை. ரஷ்யா பெரிதாக உக்ரைன் நாட்டு நகரங்கள் எதையும் கைப்பற்றவில்லை. அப்படியே ரஷ்யா கைப்பற்றிய நகரங்களையும் கடந்த இரண்டு மாதங்களில் பெரிய அளவில் இழந்து விட்டது. இந்தப் போர் ஆப்கான் தாலிபான் போர் போல ஒரு முடிவில்லாப் போராக மாறிவிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி பைடன் திடீரென உக்ரைன் சென்றது உலக அரசியலில் பெருமளவில் கவனம் பெற்றுள்ளது. இந்தப் பயணத்தை பைடன் மிகவும் இரகசியமாகத் திட்டமிட்டதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அமெரிக்க நேரப்படி அதிகாலை 4 மணிக்கு ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி பைடன் ஏர் போர்ஸ் 757 விமானத்தில் ஏறி இருக்கிறார். இந்த விமானம் சி 32 என்றும் அழைக்கப்படும்.

அமெரிக்க ஜனாதிபதி எப்போதும் வெளிநாட்டுப் பயணத்தில் பயன்படுத்தும் விமானங்களை விட இது கொஞ்சம் சிறிய விமானம். அதோடு விமானத்தின் அனைத்து ஜன்னல்களும் இறுக்கமாக மூடப்பட்டு கறுப்பாக காட்சி அளித்தது. உக்ரைன் ஜனாதிபதியை தவிர உலக நாடுகள் எதற்கும் தகவல் தெரிவிக்காமல் பைடன் பறந்துள்ளார். இதனால் உக்ரைனுக்கு பைடன் செல்வது பற்றிய சின்ன தகவல்கூட ரஷ்யாவுக்குக் கிடைக்கவில்லை. பைடனுடன் சிறிய இராணுவக்குழு, ஒரு மருத்துவக்குழு, இரண்டு செய்தியாளர்கள், இரண்டு ஆலோசகர்கள் மட்டும் சென்றுள்ளனர். இந்த இரண்டு செய்தியாளர்களும் ரகசிய காப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்து போட்டனர். பைடனுக்கு எதுவும் ஆகும் பட்சத்தில் அதை செய்தியாக, நம்பகத்தன்மையுடன் வெளியிட இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.



வானதி

இந்த விமானம் இவர்கள் அமெரிக்காவின் வாஷிங்டன் இராணுவத் தளத்தில் இருந்து ஜேர்மனிக்குச் சென்றது. 'கோல்ஃப் போட்டிக்கான வருகைக்கான வழிமுறைகளை' என்ற இரகசிய வரிகளுடன் இந்தப் பயணம் திட்டமிடப்பட்டது. ஏர்ஃபோர்ஸ் ஒன் ஜேர்மனியில் உள்ள ராம்ஸ்டீன் விமானத் தளத்தில் உள்ளூர் நேரப்படி மாலை 5.13 மணிக்கு (இங்கிலாந்து நேரப்படி மாலை 4.13 மணி) ஞாயிற்றுக்கிழமை சிறிது மேகமூட்டமான வானத்தின் கீழ் ஏறக்குறைய ஏழு மணி நேர விமானப் பயணத்திற்குப் பிறகு எரிபொருள் நிரப்புவதற்காக இறங்கியது, உள்ளே இருந்து வெளியே யாரும் அந்த நேரத்தில் செல்லவில்லை.

சுமார் ஒரு மணி நேரம் 15 நிமிடங்கள் வரை விமானம் அங்கு தரித்து நின்றது. விமானத்தில் இருந்த பத்திரிகையாளர்கள் முழு நேரமும் பிரஸ் கபினிலேயே இருந்தார்கள் மற்றும் விமானத்தின் போது அல்லது ராம்ஸ்டீனில் நிறுத்தும் போது எந்த இடத்திலும் பைடனைப் பார்க்கவில்லை. சூரியன் மறைந்து வானம் இருண்ட பிறகு ஏர்ஃபோர்ஸ் ஒன் உள்ளூர் நேரப்படி மாலை 6.29 மணிக்கு (இங்கிலாந்து நேரப்படி மாலை 5.29) புறப்பட்டது. ஏர்ஃபோர்ஸ் ஒன் ஞாயிறு அன்று உள்ளூர் நேரப்படி இரவு 7.57 மணிக்கு (இங்கிலாந்து நேரப்படி இரவு 8:57) தென்கிழக்கு போலந்தில் உள்ள Rzeszow-Jasionka விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அங்கே இருந்து பின்னர் இவர்கள் உக்ரைனுக்கு ரயிலில் பயணம் மேற்கொண்டு உள்ளனர். இதற் காக அந்த விமான நிலையத்தில் இருந்து எஸ்.யு.வி கார்களில் இவர்கள் பயணம் மேற்கொண்டு உள்ளனர். சைரன் இல்லாமல், அமைதியாக காரில் சென்று ரயில் நிலையத்தை அடைந்தனர். போலந்தில் உள்ள ரயில் நிலையம் ஒன்றில் இருந்து ரயிலில் உக்ரைன் எல்லைக்குச் சென்று அங்கிருந்து பின்னர் மீண்டும் காரில் சென்றுள்ளனர்.

மக்களோடு மக்களாக அமெரிக்காவின் பாதுகாப்புப் படை வீரர்களும் மப்டியில் இருந்துள்ளனர். இந்தக் கார் பயணம் வழியாக அவர்கள் உக்ரைன் தலைநகரை அடைந்து உள்ளார். 10 மணி நேரம் ரயில் பயணத்தை பைடன் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. இரவில் ரயில் ஏறியவர்கள் திங்கட்கிழமை அதிகாலைதான் உக்ரைனுக்குச் சென்றனர். அதன்பின் போர் பாதிக்கப்பட்ட பகுதி வழியாக காரில் சென்று கீவ் பகுதியை அடைந்தனர்.


இதன்பின்பே 9 மணி அளவில் ஜெலென்ஸ்கியை ஜோ பைடன் சந்தித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திடீர் பயணமாக உக்ரைன் தலைநகர் கீவ் சென்று, அந்நாட்டு ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது ரூ.4,135 கோடி மதிப்புள்ள ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதாக அவர் உறுதி அளித்தார்.

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி தாக்குதலை தொடங்கியது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனின் அண்டை நாடான போலந்தில் பெப்ரவரி 20,21,22 ஆம் திகதிகளில் சுற்றுப் பயணம் செய்வார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அவர் உக்ரைன் செல்வாரா? என்று செய்தியாளர்கள் கேட்டபோது, அமெரிக்க ஜனாதிபதி மாளிகை திட்டவட்டமாக மறுத்தது. உக்ரைன் தலைநகர் கீவில் சுமார் 5 மணி நேரம் தங்கியிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மாலை ரயில் மூலம் போலந்துக்குச் சென்றார்.

உலகம் உக்ரைனுடன் இருப்பதாகவே பைடனின் பயணம் சுட்டிக் காட்டுகிறது. ■



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி.
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# அரசாங்கத்திற்கு எதிராக வலுப்பெறும் போராட்டங்கள்

மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் காலப்போக்கில் மக்களால் நிராகரிக்கப்படுவது வழமையானது, மக்கள் மனம் கவரும் வாக்குறுதிகளுடன் ஆட்சிபீடம் ஏறுபவர்கள் காலப்போக்கில் வாக்குறுதிகளை மறந்துவிடுகின்றனர். மக்கள் மறப்பதில்லை.

பெப்ரவரி 22 ஆம் திகதி கொழும்பு கோட்டைப் பகுதியில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டம் நடத்த தடைவிதிக்க முயற்சி செய்யப்பட்டது. கொழும்பு கோட்டைப் பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொது அமைதியின்மை மற்றும் சேதத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு மற்றும் காலி முகத்திடலுக்குள் நுழைவதைத் தவிர்க்குமாறும் பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடாது எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தேசிய எதிர்ப்புத் தினம் எனப் பெயரிட்டுள்ளனர். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்திய சுமார் 40 துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 100 தொழிற்சங்கங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வரிக்கொள்கைகளை திரும்பப்பெறுமாறு வேண்டுகோள் விடுத்தன. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக்கொள்கை பலரை பாதித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிராக துறைமுகம், மின்சாரம், பெற்றோலியம், வங்கி மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் கலந்துகொண்டன.

பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இணைந்து கோ கமவில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்துடன் நடத்திய கூட்டுப் போராட்டம், கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்குமாறு பௌத்த மத குருமார்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் புதிய மாணவர்களை கொடுமைப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகள் வெளிவந்ததை அடுத்து முக்கிய இடத்தைப் பிடித்தது. பல்கலைக்கழக நிர்வாகம் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ரத்து செய்தது மற்றும் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை விடுதி வளாகத்தைக் காலி செய்யும்படி அறிவிப்புகளை வெளியிட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அண்மையில் விடுதலை செய்யப்பட்ட மாணவர் சங்கத் தலைவர்களான வசந்த முதலிகே மற்றும் வென்சிறிதம்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் மேற்கொண்ட பணி பகிஸ்கரிப்பு மற்றும் போராட்டம் காரணமாக வைத்தியசாலையின் பணிகள் பாதிப்படைந்துள்ளன. சுகாதார ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவு குறைப்பு உட்பட 09 கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். சுகாதார ஊழியர்கள் போராட்டம் காரணமாக வைத்தியசாலையின் கிளினிக் சேவைகள், ஆரம்ப சுகாதாரப் பிரிவு சேவைகள், வெளிநோயாளர் பிரிவு என்பன பாதிக்கப்பட்டதுடன் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். வைத்தியசாலைகளில் மருந்துகள், உபகரணங்களின் பற்றாக்குறையை நிலவுகிறது. அதிகரித்த வரியை, மேலதிக கொடுப்பனவு குறைப்பு போன்றவற்றால் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

கோட்டா ஜனாதிபதியாக இருந்தபோது தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. இன்றும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால், முன்னைரைப் போன்று வலுவான போராட்டங்களாக எவையும் பரிணமிக்கவில்லை.

ஆங்காங்கே நடைபெறும் போராட்டங்கள் ஒரு முகப்படுத்தப்படும்போது அதனை எதிர்கொள்வதற்குரிய சக்தி அரசுக்கு இருக்காது. ■

# மாணவர்களுடன் விளையாடவேண்டாம்



2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களின் மதிப்பீடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது, இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ள மற்ற அனைத்து முக்கியமான தேர்வுகளிலும் சிற்றலை விளைவுகளை ஏற்படுத்தும். 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் டிசம்பரில் இடம்பெறும் சாதாரண தரப் பரீட்சை ஆகியவை இதில் அடங்கும். குறைந்த கொடுப்பனவைக் காரணம் காட்டி பணிக்கு விண்ணப்பிக்க ஆசிரியர்கள் ஆர்வம் காட்டாத காரணத்தினால், உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக மிகப் பெரிய ஆசிரியர் அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கம் (CTU) தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு காலவரையறை யின்றி பிற்போடப்பட்டாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விசேட திட்டமொன்றை முன்வைக்கவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இந்தத் திட்டமானது இரண்டு நிலைகளில் மதிப்பீட்டைமேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்கும். எனவே, தொழிற்சங்கங்கள் கூறுவது போல் நீண்டகால தாமதம் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கருவூலத்திலிருந்து உதவித்தொகையை அதிகரிப்பது பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு எனக்கு கிடைத்ததும் அதை உடனடியாக ஆசிரியர்களுக்குத் தெரிவிப்பேன். அதன் பிறகு, கண்காணிப்பாளர்களுக்கான விண்ணப்ப செயல்முறை மீண்டும் திறக்கப்படும் என்றார்.

எவ்வாறாயினும், கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்குத் தேவையான சரியான காலக்கெடுவைக் கண்டறியும் நிலையில் ஆணையாளர் நாயகம் இருக்கவில்லை.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள் குறிப்பில் ஈடுபடும் ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் தொடர்பில் நிதி அமைச்சுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவித்தார்.

இப்பணிக்கு 19,000 ஆசிரியர்கள் தேவைப்பட்டாலும் இதுவரை 15,000 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். வழங்கப்பட்ட கொடுப்பனவை அதிகரிப்பதற்காக ஒரு மாதத்திற்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் சிரமங்கள் இருந்தபோதிலும் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகவும் அதற்கமைவாக, ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு ஓரளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அமைச்சரின் கூற்றுப்படி, மதிப்பீட்டு நடைமுறையை முடிக்க 1,300 பல்கலைக்கழக பேராசிரியர்கள் தேவை, மேலும் அவர்கள் பணியில் பங்கேற்பது குறித்து சில கவலைகளை எழுப்பியதாகவும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களின் தற்போதைய வருமானம் கண்ணியமான வாழ்க்கையைப் பராமரிக்கப் போதுமானதாக இல்லை என்பது புரிந்துகொள்ளப்பட்டாலும் குழந்தைகளின் எதிர்காலத்துடன் விளையாடுவது அவர்களின் தொழிற்சங்கத் திறனைக் காட்டுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கடந்த வாரம் முடிவடைந்த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகள் முதலில் ஆகஸ்ட் 2022 இல் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, அது மேலும் ஒக்ரோபருக்குப் பின்னர் ஜனவரி 2023 க்கும் தள்ளப்பட்டது. இதுவே அவர்கள் முடிவுகளைப் பெற்றிருக்க வேண்டிய நேரம். பள்ளியில் 13 ஆண்டுகள் கழித்த பிறகு அவர்களின் மிக முக்கியமான தேர்வு. அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்கெனவே அவர்களின் எதிர்காலத்தை ஆறுமாதங்களாக செலவழித்துவிட்டன, அது இன்னும் இருண்ட நிலையில் உள்ளது. அது போலவே, அவர்கள் எதிர்காலத்தில் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானிக்க இன்னும் சில மாதங்கள் காத்திருக்க வேண்டும். மாநிலப் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு, முடிவுகளைப் பொறுத்து ஒரு தனியார் பல்கலைக்கழகம் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம். கூடுதலாக, அந்த மூன்றாம் நிலைக் கல்வித் தேர்வுகள் எதுவும் அவர்களுக்குக் கட்டுப்படியாகாத பட்சத்தில், தொழில் சார்ந்த உயர்கல்வி விருப்பத்தைத் தொடரலாமா என்பதைத் தீர்மானிக்கும் முன், அவர்கள் இன்னும் சிலமாதங்கள் நிச்சயமற்ற நிலையில் கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை சந்தேகத்திற்கு இடமின்றி எந்த ஒரு ஊழியர் அல்லது தொழில் நிபுணரின் உரிமையாகும், ஆனால் யாருடைய செலவில் என்பது மிகவும் பொருத்தமான கேள்வியாகக் கேட்கப்படுகிறது. 2021 நவம்பரில் அரசாங்கம் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான சம்பள உயர்வுக்காக 30 பில்லியன் ரூபாயை ஒதுக்கியது. ஆகஸ்ட் 30 அன்று அமைச்சரவை துணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஒதுக்கீடு, பள்ளி ஆசிரியர்களின் மூன்று மாதங்களுக்கும் மேலான தொழிற்சங்க பிரச்சாரத்தை திறம்பட முடிவுக்குக் கொண்டு வரும் என்று நம்பப்பட்டது.

இது ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்திற்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட 109,000 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக இருந்தது. 24 ஆண்டுகளாக சேவையை பாதித்த சம்பள முரண்பாடுகள் தொடர்பாக தொழிற்சங்கங்களும் அரசாங்கமும் முரண்பட்டன. பல நெருக்கடிகளை எதிர்கொண்ட அரசாங்கம், நான்கு வருட உத்தியில் அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு முன்னர் முன்மொழிந்திருந்தது, ஆனால் அந்த முன்மொழிவை நிராகரித்ததன் பேரில், அரசாங்கம் பின்னர் இரண்டு தவணைகளில் அதிகரிப்புகளை வழங்க முன்மொழிந்தது, இது விரும்பிய தொழிற்சங்கங்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்டது ஒரே நேரத்தில் அதிகரிப்பு.

பாடசாலைகளில் மனநலம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை எனவும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில நாட்களுக்கு முன்னர் ஒப்புக்கொண்டார். இந்தத் துறையில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாதது நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும் என்றார். ■

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்குத் தேவையானது என்ன?



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

தேர்தலை நடத்தத் தேவையான நிதியை திரட்டுவதில் உள்ள சிரமம் குறித்து அரசு விளக்கம் அளித்துள்ளது. பணப் பற்றாக்குறை காரணமாக வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியவில்லை என்று அரசாங்க அச்சகமும் தெரிவித்தது.

இலங்கையில் உள்ள சில அரசியல் கட்சிகளும் சில செயற்பாட்டாளர்களும் பிரச்சினைகளை பாராட்டுவதற்கும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கும் பதிலாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அட்டவணைப்படி நடத்த வேண்டும் என்று கோருகின்றனர். தேர்தலை நடத்தக் கோரி போராட்டங்களை நடத்தப் போவதாகவும் மிரட்டுகிறார்கள்.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத அளவிலான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதை உலகம் முழுவதும் அறியும் எல்லையோர திவால்நிலையை நாடு எதிர்கொள்கிறது, சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடனுக்காக “பிச்சை” எடுக்க வேண்டிய அவமானகரமான நிலையை நாடு எதிர்கொள்கிறது மற்றும் திருப்பிச் செலுத்தும் அட்டவணையை ஒத்திவைக்க கடன்களை நீடித்த நாடுகளிடம் முறையிட வேண்டும். அதனால் இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தாத நாடாக முடிவடையாது.

இவ்வாறான சூழ்நிலையில், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டின் ஜனாதிபதியாக விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையில் நீண்ட வருடங்களாக வெளிப்பட்டுவரும் நியாயமான தனிப்பட்ட நம்பகத்தன்மையுடனும் ஜனாதிபதி இலங்கையைக் கடக்க தன்னால் முடிந்த வரை முயற்சி செய்து வருகிறார். கரடுமுரடான நீரில் இருந்து வெளியேறி, உலக அரங்கில் துடிப்பான தேசமாக அதன் கண்ணியத்தை மீட்டெடுக்க வேண்டும். ஜனாதிபதி ஒரு தொடக்கத்தில் இருந்து தொடங்க வேண்டும் என்பதால், பணி எளிதானது அல்ல.

இவ்வாறான நிலையில், முதிர்ச்சியடைந்த ஜனநாயகத்தில், பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில் இருந்து இலங்கையை மீட்பதே அவசரப் பணியும் சவாலும் என்பதால், அனைத்து அரசியல் கட்சிகளும் சமூகத்தின் பல்வேறு துறைகளில் உள்ள குடிமக்களும் ஜனாதிபதிக்கு புரிந்துணர்வையும் ஆதரவையும் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் கடந்த காலங்களில் பல தேர்தல்கள் நடந்துள்ளன, மேலும் ஒரு தேர்தலை சில மாதங்களுக்கு தாமதப்படுத்துவது இதுபோன்ற பாதகமான சூழ்நிலையில் எந்தவொரு பொறுப்பற்ற முறையிலும் பார்க்கக்கூடாது, “சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட தேர்தலைத் தடுக்கும். இதுபோன்ற முயற்சிகள் முன்னோடியில்லாத தாக்குதலைப் பிரதிபலிக்கின்றன. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் எதிர்காலத்தில் தேர்தல் செயல்முறைக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.”

எந்த நாட்டிலும் ஜனநாயகம் “வெற்று வயிற்றில்” தழைக்க முடியாது என்பதுதான் அடிப்படை உண்மை. எனவே, கோடிக்கணக்கான ஏழை மக்களின் இன்றைய வாழ்க்கையைப் பாதிக்கும் நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள தேசியப் பொருளாதாரத்தின் இழப்பில், மக்களின் உரிமையைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது மற்றும் தேசிய நலனுக்கு எதிரானது.



சில அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் தேசத்தின் நலனுக்கான அர்ப்பணிப்பு மற்றும் மோசமான நிலைமையைப் புரிந்து கொள்வதற்கும் அவர்கள் மீது சில சந்தேகங்களை உருவாக்கியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதை உறுதி செய்வதில் தலையிடக்கோரி சில அரசியல்வாதிகள் கொழும்பைச் சேர்ந்த இராஜதந்திரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் உள்ள இந்த அரசியல்வாதிகளின் மனநிலையையும் அணுகுமுறையையும் என்ன செய்வது? உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உறுதிப்படுத்த சர்வதேச தலையீடு அவசியம் என்பது இவர்களது வழக்கா? இலங்கையின் உள்விவகாரங்களில் உலகளாவிய தலையீட்டை விரும்பும் அரசியல்வாதிகளின் இத்தகைய அணுகுமுறையைவிட இலங்கை மக்களுக்கு அவமானகரமான செயல் இருக்க முடியுமா?

பல ஜனநாயக நாடுகளில் அரசியல்வாதிகள் குடிமக்களில் சிறந்தவர்கள் அல்ல, அவர்கள் அவ்வப்போது சுயநலம், பார்ப்பனிய அணுகுமுறை மற்றும் சில சமயங்களில் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக நெறிமுறையற்ற முறைகளைக் கடைப்பிடிப்பதால் அழிவை ஏற்படுத்துகிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளில், உலகெங்கிலும் உள்ள பல சிந்தனையாளர்கள் மற்றும் அரசியல் ஆராய்ச்சியாளர்கள், கட்டுப்பாடற்ற மற்றும் குழப்பமான ஜனநாயகத்திற்குப் பதிலாக, கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம், குறிப்பாக வளரும் நாடுகளுக்கு உலகிற்கு நன்மை செய்யும் என்ற பார்வைக்கு மாறுகிறது.

இன்று, இலங்கையில் தேர்தல் நடத்தப்பட்டால், கடுமையான விவாதங்கள், வெறுப்பு அரசியல், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஊழல் முறைகள் மற்றும் அரசியல் மோதல்கள் காரணமாக வன்முறைகள்கூட இருக்கும். இவை சாத்தியமான முன்னேற்றங்கள்.

நாட்டின் கவனம் பொருளாதார வளர்ச்சி மட்டுமே இருக்க வேண்டும். இலங்கையின் ஜனாதிபதியாக மிகவும் அனுபவம் வாய்ந்த நபர் இருக்கிறார், இலங்கையின் பெருமையை மீட்டெடுக்க அவருக்கு நேரமும் ஆதரவும் தேவை.

இலங்கையில் ஜனநாயகம் குறைந்துள்ள காலம் இது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதானது ஜனநாயகம் குறைவதைக் குறிக்கும் என்றால், அது அப்படியே இருக்கட்டும் அது இலங்கையின் நலனுக்கானது. ■

என்.எஸ்.வெங்கடராமன்

# அழகான ஆடைக்குள் வெற்றுப்பை

அவதானி



ஆங்கிலத்தில் ஒரு வாசகம் இப்படிச் சொல்கிறது:

Clean suit empty pocket. இதன் அர்த்தம் புரிந்துகொள்ளத்தக்கது. தமிழ்த் திரைப்படங்களில் வரும் காதல் காட்சிகளில் தோன்றி ஆடிப் பாடும் கதாநாயகன், அணிந்திருக்கும் மிகவும் பெறுமதியான ஆடையிலிருக்கும் பையில் (Pocket) பணம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அது காட்சிக்குத் தேவையும் இல்லை!

அத்தகைய ஒரு நிலையில்தான் இன்றைய இலங்கை அரசாங்கம் இருக்கிறது. அதாவது, பேச்சுப் பல்லக்கு. பயணமோ கால்நடை.

ஜனநாயக நாட்டில் தேர்தல்தான் ஒரு அரசை அமைப்பதற்கான தீர்ப்பை வழங்கும் என்பது பொதுவான விதி. தேர்தல் நடத்துவதற்கு பணம் தேவை. வாக்குச்சீட்டுக்கள் அச்சிடவேண்டும். அதற்கே பெருந்தொகைப்பணம் அவசியம். அந்த நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கவேண்டிய நிதியமைச்சு கையை விரித்தால் என்ன நடக்குமோ..? அதுதான் தற்போது இலங்கையில் நேர்ந்திருக்கிறது.

நிதியமைச்சின் இந்தக் கைவிரிப்பினை அரசின் திட்டமிட்ட சதி என கருதுகின்றன எதிரணிக்கட்சிகள். ஆளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, ராஜபக்ஷாக்களின் பொதுஜன பெரமுனவின் ஆசிர்வாதத்துடன் இயங்குகிறது என்பதே பொதுவான அபிப்பிராயம்.

தங்களிடம் ஆட்சியைத் தந்தால், இலங்கையிலிருக்கும் பொருளாதார நெருக்கடி உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடுவோம் என்றுதான் சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அனுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், அவ்வாறெல்லாம் சொல்ல முடியாத தமிழ்தேசியக்கட்சிகள், தங்கள் செல்வாக்கு எத்தகையது என்பதைக் காண்பிப்பதற்காகவே ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தல்களிலும் களம் இறங்கிவருகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடக்கமாட்டாது என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் மஹிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுனவும் இந்த செய்தியை எதிர்பார்த்திருந்தமையால் இவர்களுக்கு எந்தவொரு ஏமாற்றமும் இல்லை. திட்டமிட்டவாறு தேர்தல் நடந்திருந்தால், இவர்களின் “பொட்டுக்கேடு” வெளிச்சத்திற்கு வந்திருக்கும்.

எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் தீர்ப்பு எவ்வாறு அமையும் என்பதை முற்கூட்டியே தீர்க்கதரிசனமாக சொல்லத்தக்கவகையில்தான் இந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் இடம்பெறவிருந்தது.

நீண்டகாலமாக மாகாண சபைகளுக்கான தேர்தலும் நடக்கவில்லை. அதனை நடத்த வேண்டும் என்ற குரலும் முன்னர் எழுந்து, பின்னர் அடங்கிவிட்டது. அதனை நடத்துவதாயின் மாகாணங்களுக்கான அதிகாரப்பகிர்வு குறித்தும் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றியும் அரசியல் கட்சிகள் பேசவேண்டும்.

ஆனால், மார்ச் மாதம் நடக்கவிருந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் அந்த சில்லெடுப்புகள் இல்லை. அதனால்தான் இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் தங்களை வேட்பாளர்களாக பதிவுசெய்து களத்தில் இறங்கத் தயாராகியிருந்தனர்.

ரணிலின் அரசு கைவிரித்துவிட்டது. திறைசேரியிடம் பணம் இல்லை என்பதே பிரதான காரணம் எனச்சொல்லப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மக்களின் கருத்துக்கணிப்பைக் கண்டு தெளிந்தவர் போன்று இவ்வாறு சொல்லியிருக்கிறார்: “நாட்டின் மொத்த சனத்தொகையில் 90 சதவீதமானோர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இயங்கும் அரசில் நம்பிக்கை இழந்துவிட்டனர். மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுக்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்காது. அதனால் தேர்தல் நடத்தி புதிய அரசுக்கு வழிவிடவேண்டும்.”

அவ்வாறாயின் எந்தக்கட்சி புதிதாக அரசமைக்கும்..? ஒரு கட்சியா அல்லது பல கட்சிகள் இணைந்த கூட்டரசாங்கமா..?

இலங்கை சுதந்திரம்பெற்ற காலம் முதல் அமைந்த பல அரசுகள் பல கட்சிகளின் கூட்டாகத்தான் உருவாகியிருக்கின்றன.

ஒரு சில தடவைகள்தான் அறுதிப்பெரும்பான்மையுடன் அரசு அமைந்துள்ளது. அதில் குறிப்பிடத்தகுந்த ஒன்று 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தனவின் தலைமையில் தோன்றிய அரசு. அந்த அறுதிப்பெரும்பான்மை பலத்தினால்தான் அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தன்னை பிரகடனப்படுத்தினார்.

அத்துடன் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி, உள்நாட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு வேட்டும் வைத்தார். அவரது பதவிக்காலத்தில்தான் மூன்று தடவைகள் இலங்கையில் இனக் கலவரமும் வந்தது. தேசிய இனப்பிரச்சினையும் கூர்மையடைந்து, தமிழ் இன விடுதலைப்போராட்டம் வெடித்தது. அதனை அடக்குவதற்காக மாறி மாறி பதவிக்கு வந்த அனைத்து அரசுகளும் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாவை செலவிட்டு, நாட்டையே அதல பாதாளத்துக்குள் தள்ளியது.

எனவே, இலங்கையின் இன்றைய நிலவரத்தின் ரிஷி மூலம் ஜே.ஆரிலிருந்தே தொடங்குகிறது. நீடித்த போரினால் பெரிதும் பாதிப்புற்ற ஜப்பான், வியட்னாம் முதலான நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தில் எங்கோ சென்றுவிட்டன.

இந்த இரண்டு நாடுகளும் அந்நிய நாடுகளின் படையெடுப்பினால் பெரும் தாக்கத்தை சந்தித்தவை. ஆனால், எமது இலங்கையில் என்றைக்கோ புரிந்துணர்வுடன் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவேண்டிய இனப்பிரச்சினையானது நீண்ட கொடிய யுத்தத்தினால் பேரவலத்துடன் முடிவுக்கு வந்தது.

அதனை சில சர்வதேச நாடுகளின் உதவியுடன் முடித்த ராஜபக்ஷவினர், எமது நாட்டை பாரிய பொருளாதார நெருக்கடி தோன்றியபோது அதே சர்வதேச நாடுகளிடம் விட்டுவிட்டு, தங்களுக்கு விஸ்வாசமான ஒரு பினாமியிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கியிருக்கின்றனர். அவர்கள் முற்றாக ஒதுங்கவில்லை. இளவரசர் ஒருவர் வாரிசாக வருவதற்கு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். அதனால் ஒதுங்க மாட்டார்கள்.

இந்தப் பின்னணியில், ஊசலாடும் இந்த அரசினை தோற்கடித்து மக்களுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய ஒரு பலம் மிக்க அரசு தோன்ற வேண்டுமானால், எதிரணியிலிருக்கும் கட்சிகள் தமக்குள் ஒரு புரிந்துணர்வு மிக்க தீர்மானத்திற்கு வர வேண்டும். அந்தத்தீர்மானத்தை எடுக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகவே நடக்கவிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அமையவிருந்தது. ஆனால், போட்டியிட முன்வந்த எதிர்த்தரப்பு கட்சிகளினதும் அவற்றின் வேட்பாளர்களின் எண்ணிக்கையையும் பார்த்தபோது, அத்தகையதோர் தீர்மானம் வெறும் கானல் நீர்தான்.

அப்பாவிப் பொதுமக்கள் தற்போது மட்டுமல்ல எப்போதுமே கானல் நீரைக்கண்டு ஓடும் மான்களாகவே இருக்கின்றனர். ■

# மகா மனிதனை எதிர்பார்க்கும் தமிழ் மக்கள்

சி.அ.யோதிலிங்கம்



தமிழ்நாட்டில் நெடுமாறன் ஐயா பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். அவரது குடும்பத்தினருடன் நான் பேசியிருக்கிறேன் என விடுக்கப்பட்ட அறிவிப்பு தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் பலத்த வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. தாயகத்திலுள்ள மக்கள் மத்தியில் இந்த அறிவிப்பு பெரிய பரபரப்பைக் கொண்டுவந்தது எனக் கூறிவிட முடியாது. ஏற்கெனவே பேசப்பட்டுவரும் விடயம் என்பதால் தாயக மக்களுக்கு இது புதிய செய்தியாகவும் இருக்கவில்லை. ஆனால், தென்னிலங்கையிலும் தமிழ்நாட்டிலும் முக்கிய விவாதத்திற்குரிய செய்தியாகவே இது பார்க்கப்படுகின்றது. தாயகத்தில் ஊடகங்களில் மட்டும் இது விவாதப் பொருளாகி உள்ளதே ஒழிய மக்கள் மத்தியில் பெரிதாக இல்லை. கடந்த வார வாரமலர் பத்திரிகைகளில் இந்த விவகாரமே அதிக இடத்தைப் பிடித்திருந்தது எனலாம்.

ஆனால், தமிழ்நாட்டிலும் தென்னிலங்கையிலும் பலத்த பரபரப்புக்குரிய விவகாரமாகவே இது பேசப்படுகின்றது. இலங்கை அரசு பிரபாகரன் உயிரோடு அவரது முழு அக்கறையும் செயற்பாடும் ஈழப் போராட்டம் பற்றியதுதான். பல தடவை அதற்காக சிறையும் சென்றிருக்கின்றார். பிரபாகரன்மீது அதீத பற்றுக்கொண்டிருக்கின்றார். ஒரு வகையில் பிரபாகரன் மீது அதீத பக்தி உடையவர் எனலாம். அந்தப் பக்தி காரணமாக பிரபாகரன் உயிரோடிருக்கின்றார் என அவர் கருதியிருக்கக்கூடும். இங்கே பக்தர்கள் முருகனுடன் பேசுவது போல அவரும் பிரபாகரனுடன் பேசியிருக்கலாம்.

இல்லை என நியாயப்படுத்த தடுமாறுகின்றது. இலத்திரனியல் ஊடகங்களும் வலைத்தளங்களும் இதற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளன. துறைசார் நிபுணர்களுடன் இதுபற்றிய நேர்காணல்களும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. புலம்பெயர் நாடுகளிலும் ஒரு குழு மற்றைய குழுவைத் தாக்குவதற்கும் இது பயன்படுத்தப்படுகின்றது.

தாயக தமிழ் ஊடகங்களில் இந்த அறிவிப்பினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியே அதிகம் பேசப்பட்டன. குறிப்பாக, ரணிலின் அரசியல் தீர்வுமுயற்சிகள் குழப்பமடையும் சிங்களக் கட்சிகள் ஒருங்கிணையும். காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தாமதப்படுத்தப்படும். காணாமல் போனவர்களது உறவுகள் நடாத்தும் போராட்டங்கள் பலவீனமடையும். படைத்தரப்பின் கெடுபிடிகள் அதிகரிக்கும். அவர் உயிருடன் வந்தாலும் எந்தப் பயனும் இல்லை என்ற வகையிலேயே கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இதில் பல மிகைப்படுத்தப்பட்ட கருத்துகளாகவும் உள்ளன. சிங்களக் கட்சிகள் புதிதாக ஒருங்கிணைய தேவையில்லை இனப்பிரச்சினை தொடர்பாக அவை ஏற்கெனவே ஒருங்கிணைந்துதான் செயற்படுகின்றன. 13 ஆவது திருத்த விடயத்தில்கூட மொட்டுக் கட்சிகள், மைத்திரி, ஜே.வி.பி தமது பழைய முகத்தைக் காட்டத் தவறவில்லை.

ஆயுதப் போராட்டம் தொடங்கினால் பலமாக இருக்கின்ற ஸ்ரீலங்கா இராணுவம் கடுமையாக இருக்கும் என்றும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இன்று ஒரு போருக்கு சிங்களத் தரப்பும் தயாரில்லை. தமிழ்த் தரப்பும் தயாரில்லை என்பதே உண்மை நிலையாகும். ஒரு தேர்தலை நடாத்துவதற்கே நிதிக்கு அல்லல்படும் ஸ்ரீலங்கா அரசு போருக்கு நிதியை செலவிடும் என நம்புவதே கடினமானதாகும். தமிழ்த் தரப்பும் போருக்குத் தயாரில்லை என்பது உண்மையாயினும் அதிலும் பார்க்க மேலான உண்மை தற்போதைக்கு தமிழ்த் தரப்பிற்கு ஆயுதப் போராட்டம் தேவையில்லை என்பதே. அரசியல் ரீதியாகவே உலகம் தழுவிய முன்னேறி செல்லக்கூடிய வாய்ப்புக்கள் தமிழ் அரசியலுக்கு உண்டு. தமிழ் அரசியல்வாதிகள் அதனை முன்னெடுக்கவில்லை என்பது வேறுகதை.

நுணுக்கமாக, அவதானிப்பின் நெடுமாறன் ஐயாவின் அறிவிப்புக்குப் பல காரணிகள் உண்டு எனலாம். அதில் முதலாவது நெடுமாறன் ஐயா இதனை புதிதாகக் கூறவில்லை. 2009 ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட காலத்தில் இருந்தே கூறிவருகின்றார். இந்தத்தடவை ஒரேயொரு வேறுபாடு பிரபாகரனின் குடும்பத்துடன் தான் நேரடியாகப் பேசியுள்ளேன் எனக் கூறியமையாகும். இந்தக் கூற்றைவைத்துக்கொண்டு நெடுமாறன் ஐயாவுக்கு விழும் கல்லெறிகள் கொஞ்சநஞ்சமல்ல. இக்கல்லெறிகள் அவருக்கு மட்டுமல்ல அவருடன் இணைந்து ஊடக மாநாட்டை நடாத்திய காசி ஆனந்தனுக்கும் விழுந்துள்ளன. நெடுமாறன் ஐயா விவகாரத்தில் சற்று நிதானமாக கருத்துச் சொல்வதே தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானது.

நெடுமாறன் ஐயா ஒரு தமிழ்த் தேசியத் துறவி. ஈழவிவகாரத்தை அவர் கையிலெடுத்தபின் முன்னாள் காங்கிரஸ்காரரான அவர் கட்சி அரசியலிலோ, தேர்தல் அரசியலிலோ ஈடுபடுவதில்லை. முருக பக்தன் ஒருவனுக்கு முருகன் இல்லை என்பதை எப்படி நம்பமுடியாதோ அதேபோல பிரபாகரன் இல்லை என்பதையும் நெடுமாறன் ஐயாவால் நம்ப முடியாது. நம்பிக்கை சார்ந்த விடயமொன்றிற்கு சான்றுகள் தேடுவது இலகுவானதல்ல.

இரண்டாவது காரணம் புலம்பெயர் சக்திகளில் ஒரு தரப்பினரின் பிரச்சாரமாகும். 2009 ஆம் ஆண்டிலிருந்தே பிரபாகரன் உயிரோடு உள்ளார் என்ற பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை ஒட்டி புலம்பெயர் தரப்பின் புலிச் செயற்பாட்டாளர்கள் 2009 இலிருந்தே இரண்டாகப் பிரித்திருந்தனர். பிரபாகரன் உயிரோடு இல்லை. ஏனைய முக்கிய தளபதிகளும் இறந்துள்ளனர். இனி புலிகள் இல்லாத காலத்திற்குரிய புதிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்றவகையிலேயே நாடு கடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்டது. இவ் அரசின் பிரதிநிதிகளுக்கான தேர்தலும் புலம்பெயர் மக்கள் மத்தியில் நடாத்தப்பட்டது. இதற்குப் போட்டியாக பிரபாகரன் உயிரோடு இருக்கின்றார் புதிய அரசியல் தேவையில்லை. புலிகள் இயக்கத்தின் தொடர்ச்சியைப் பேணலாம் என்ற வகையில்தான் அனைத்துலக மக்களவை உருவாக்கப்பட்டது. அதுவும் புலம்பெயர் மக்கள் மத்தியில் தனது பிரதிநிதிகளுக்கான தேர்தலை நடாத்தியிருந்தது. தேர்தல்கள் ஒரேயொரு தடவை மட்டும்தான் இடம்பெற்றன. பின்னர் உள்மட்ட தெரிவுகள் மட்டும்தான்.

புலம்பெயர் தரப்பில் தமிழ் மேட்டுக்குடிகள் தற்போதும் நாடுகடந்த தமிழீழ அரசுடனும், சுமந்திரனுடனும் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். சாதாரண மக்கள்தான் அனைத்துலக மக்களவையுடன் உள்ளனர். புலம்பெயர் சாதாரண மக்கள் மத்தியில் செயற்பட வேண்டுமானால் பிரபாகரன் உயிரோடு இருப்பதாகக் கூறவேண்டும், தமிழீழக் கோரிக்கையையும் கைவிடாது முன்வைக்க வேண்டும். இது அங்கேயுள்ள யதார்த்தம். இந்தத் தரப்பின் பிரச்சாரங்களும் நெடுமாறன் ஐயாவை பேச வைத்திருக்கலாம். எனினும் இந்தத் தடவை அனைத்துலக மக்களவை சற்று அடக்கியே வாசிக்கின்றது.

மூன்றாவது இந்திய மத்திய அரசின் தூண்டுதலாக இருக்கலாம். கொழும்பில் பௌத்த பிக்குமார் 13 ஆவது திருத்தத்தை எரித்தமையை இந்தியா ஏற்கவில்லை. இது ஒரு வகையில் இந்தியாவையே எரித்தமைக்கு சமனாகும். இந்த எரிப்பு காரணமாக நெடுமாறன் ஐயா ஊடாக இந்திய மத்திய அரசு ஒரு செய்தியை இலங்கை அரசிற்கு சொல்ல முயற்சித்திருக்கலாம். நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் பிரபாகரனையும் உயிர்ப்பிப்பேன் என்பதே அந்தச் செய்தியாகும்.

இலங்கை அரசைக் கையாள்வதில் இந்திய அரசு தொடர்ச்சியாக தோல்விகளையே தழுவி வருகின்றது. தமிழ் அரசியலைக் கையாள்வதிலும் இந்தியாவிற்கு தோல்விதான். தொடர் தோல்விகள் இலங்கையில் இந்தியாவின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கிவிடும். இந்தியாவின் இருப்பு கேள்விக்குள்ளாகுமானால் இந்தியாவின் தேசிய பாதுகாப்பே கேள்விக்குள்ளாகும். எனவே, நெடுமாறனுக்கூடாக இலங்கையை அச்சுறுத்தி தனது நிகழ்ச்சி நிரலை முன் நகர்த்த இந்தியா முயற்சித்திருக்கலாம்.

இதிலும் ஒரு உண்மை இருப்பதுபோலவே தெரிகின்றது. அறிவிப்பு வந்த சில நாட்களிலேயே அமெரிக்க புலனாய்வுப்பிரிவு போர் விமானத்தில் இலங்கை வந்து திரும்பியிருக்கின்றது. விமான நிலையத்தில் கடவுச்சீட்டு எதுவும் சோதிக்கப்படாமல் அமெரிக்க புலனாய்வுக்குழுவினர் இலங்கைக்குள் வந்துள்ளனர். இவர்களது வருகையை ஒட்டி கட்டுநாயக்கா - கொழும்பு பெரு வீதியும் மூடப்பட்டு பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் யாரிடம் என்ன பேசினார்கள் என்பது வெளிவராமலே அவர்கள் திரும்பியுள்ளனர். திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து பொறுப்பேற்கப்போவதாக செய்திகள் வருகின்றன. தற்போது சீனா கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்புத் தராமல் இருந்தால் கூட சர்வதேச நாணயநிதியம் கடன் உதவியை வழங்கப் போவதாக இன்னோர் செய்தி வந்திருக்கின்றது.

13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களிடம் விற்பது கடினம். அதையே சிங்களத் தரப்பு கொடூரமாக எதிர்க்கின்றது என்பது இந்தியாவிற்கு பாரிய எரிச்சலை ஊட்டியுள்ளது. இதனால் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய செய்தியைக் கொடுக்க வேண்டிய தேவையும் இந்திய மத்திய அரசிற்கு உண்டு. நெடுமாறனின் அறிவிப்பு தமிழ்த் தரப்பிற்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கும் எனவும் இந்தியா கருதியிருக்கலாம்.

தமிழ் அரசியலைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியின் தீர்மானம் எடுக்கும் நிலையிலுள்ள சம்பந்தனும் சுமந்திரனும் இந்தியாவோடு இல்லை. கஜேந்திரகுமார் கட்சியும் இந்தியாவுடன் இல்லை. போதாக்குறைக்கு விக்கினேஸ்வரனின் கட்சியும் விலகியே நிற்கின்றது. தற்போது இந்தியாவுடன் நிற்கும் ஒரேயொரு குழு குத்துவிளக்குக்காரர்கள் மட்டும்தான். இவர்களை மட்டும் வைத்துக் கொண்டு தமிழ் அரசியலை ஒருபோதும் கையாள முடியாது.

எனவே, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் முயற்சியாகவும் இந்த அறிவிப்பு இருக்கலாம். 2009க்கு பின்னர் ஒரு தேக்க நிலையில்தான் தமிழ்த் தேசிய அரசியல் இருக்கின்றது. இங்கு கட்டுறுதியான ஒரு அரசியலோ, அரசியல் இயக்கமோ, அரசியல் தலைமையோ இல்லை. மறுபக்கத்தில் தேர்தல் அரசியலுக்குள்ளும் கட்சி அரசியலுக்குள்ளும் தமிழ்த்தேசிய அரசியல் மாட்டுப்பட்டுக் கிடக்கின்றது.

தேசிய அரசியல் செயற்பாடு என்பது ஒரு வகையில் அஞ்சலோட்டம்தான். தமிழ் அரசியல் வரலாற்றில் முதன்முதல் ஓடத்தொடங்கியவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம்தான். அவர் தடியை ஜி.ஜி.பொன்னம்பலத்திடம் கொடுக்க அவர் செல்வநாயகத்திடம் கொடுத்தார். தந்தை செல்வா அதனை பிரபாகரனிடம் கொடுத்தார். பிரபாகரனுக்குப் பிறகு தடியை வாங்க பொருத்தமானவர்கள் கிடைக்கவில்லை.

அருணாசலத்தின் அரசியலைவிட ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் முன்னேற்றகரமாக இருந்தது. இவரின் அரசியலைவிட தந்தை செல்வாவின் அரசியல் முன்னேற்றகரமாக இருந்தது. தந்தை செல்வாவின் அரசியலைவிட பிரபாகரனின் அரசியல் முன்னேற்றகரமாக இருந்தது.

எனவே, புதிய அரசியல் பிரபாகரனைவிட முன்னேற்றகரமாக இருக்கவேண்டும். ஆனால், யதார்த்தத்தில் தந்தை செல்வாவின் அரசியலைக்கூட தற்போதைய அரசியல் சக்திகளினால் பின்பற்ற முடியவில்லை. தற்போது தமிழ் மக்கள் ஒரு மகா மனிதனைத் தேடுகின்றனர். அந்த மகா மனிதன் பிரபாகரனுக்கு மேலானவராக இருக்க வேண்டும்.

வரலாற்று நிர்ப்பந்தம் இதுதான். ■

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான போர் ஓராண்டைக் கடந்துவிட்டது. இருதரப்பிலும் இலட்சக்கணக்கில் உயிர் பலிகள், மீட்டுருவாக்கம் செய்யமுடியாத உடமைச் சேதங்கள், பில்லியன் கணக்கில் பொருளாதாரச் சரிவுகள் என அனைத்து வகையான பேரிழப்புகளைச் சந்தித்தபின்னும் போரை முடிவுக்குக் கொண்டங்களுடன் வரவேற்றுக்கொண்டிருந்தபோது, உக்ரைன்-ரஷ்ய நாடுகள் மட்டும் மிகுந்த பதற்றத்துடனே காணப்பட்டன. 2021 நவம்பர் மாதம் தொடங்கிய அந்தப் போர்ப் பதற்றம், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய கணக்காக நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருந்தது. அதற்கேற்றார்போல அமெரிக்க ஜனாதிபதி

முன்னதாக, ரஷ்யா போர் தொடுத்தால் அமெரிக்காவும் நேட்டோ படைகளும் தங்களது நாட்டுக்கு ஆதரவாக இருக்கும் என்ற தைரியத்தில் தன்னைவிட இராணுவபலத்தில் மிகப்பெரிய நாடான ரஷ்யாவுக்கு எதிராகச் சவால்விட்டு வந்தார் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி. ஆனால், "உக்ரைன் எங்களது நேட்டோ கூட்டமைப்பின் உறுப்பு



# ஓராண்டைக் கடந்த உக்ரைன் – ரஷ்ய போர்

டுவராமல் இருநாடுகளும் உக்கிரமாய் தங்கள் சண்டையைத் தீவிரப்படுத்திக்கொண்டிருக்கின்றன. உலக நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குங்கள் என கேட்டுக்கொண்டாலும் அவற்றையெல்லாம் மதிக்காமல் விடாப்பிடியாக போரைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. ஐ.நாவும் வழக்கம்போல 'போரை நிறுத்துங்கள்' என கண்துடைப்பு அறிக்கைகளையே ஒவ்வொரு மாதமும் வெளியிட்டுக்கொண்டிருக்கிறது.

உக்ரைன் - ரஷ்ய போர் தாக்கத்தால் அந்த இரு நாடுகள் மட்டுமல்லாமல் உலக நாடுகள் முழுவதும் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம் என அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்றன



குறிப்பாக, ரஷ்ய எல்லையை ஒட்டிய கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் வாழும் உக்ரைன் மக்கள் (ரஷ்ய மொழி பேசுபவர்கள்) பொதுவாக ரஷ்ய ஆதரவு நிலைப்பாடுடைய பகுதியை ஒட்டிய உக்ரைன் மக்கள் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு நிலைப்பாட்டுடனும் இருக்கின்றனர். உக்ரைன் மக்களின் இந்த அடிப்படை உளவியலை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யாவும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றன.

இதற்கு முக்கிய காரணம், உக்ரைன் ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடைப்பட்ட எல்லையில் அமைந்திருக்கிறது. எனவே, கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த உக்ரைனை சரியான களமாக தேர்வுசெய்திருக்கும் அமெரிக்க, ஐரோப்பிய கூட்டு நாடுகள், உக்ரைனை தங்களின் நேட்டோ கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ள ஆதரவு தெரிவித்தன. வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் கூட்டுசேர ஏற்கெனவே விருப்பம் தெரிவித்துவந்த உக்ரைன், நேட்டோ (NATO- அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளோடு 28 ஐரோப்பிய நாடுகள் இணைந்து ஏற்படுத்தப்பட்ட அமைப்பு) கூட்டமைப்பில் இணையவும் ஆர்வம் கொண்டது.

'உலகமே 2022 ஆம் ஆண்டை கொண்டாட்

ஜோ பைடன், "உக்ரைனைத் தாக்கினால் சும்மா இருக்க மாட்டோம்" என உக்ரைனை ரஷ்யாவுக்கு எதிராக உசுப்பிக்கொண்டிருந்தார்.

உக்ரைன் எல்லையைச் சுற்றி சுமார் 1 இலட்சம் ரஷ்யப் படைவீரர்கள் குவிக்கப்பட்டனர். கருங்கடல் பகுதியில் ரஷ்யப் போர்க்கப்பல்கள் நங்கூரமிட்டன. உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தனது நாட்டுப் பெண்களுக்கும் பொதுமக்களுக்கும் கூட ஆயுதப்பயிற்சி வழங்க உத்தரவிட்டார். ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொள்ள உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அனுப்பிவைத்தது அமெரிக்கா. அதேசமயம், நிலைமை கட்டுப்பாட்டை மீறி செல்வதற்குள் 'அமெரிக்கர்களே உடனடியாக உக்ரைனை விட்டு வெளியேறுங்கள்' என அவசர அறிவிப்பையும் அமெரிக்கா வெளியிட்டது. அதைத் தொடர்ந்து அப்போதைய இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சனும் "ரஷ்யாவிடம் போர்த் திட்டங்கள் தயாராக இருக்கிறது. உக்ரைன் தலைநகர் கீவ்வை (Kyiv) முற்றுகையிட்டு தாக்குதல் நடத்த தீர்மானித்திருக்கிறது. இதன்மூலம், 1945 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஐரோப்பாவில் ஒரு மிகப் பெரிய போரை நடத்துவதற்கு ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது" என வலுவான எச்சரிக்கை விடுத்தார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி எதிர்பார்த்த படியே ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைன் மீது போர் தொடுக்க தனது நாட்டு இராணுவத்திற்கு அதிரடியாக உத்தரவிட்டார். அடுத்த கணமே, உக்ரைன் மீது வான்வழியாகக் குண்டு மழை பொழிந்தது ரஷ்ய விமானப்படை.

இதனை சிறப்பு இராணுவ நடவடிக்கை என்றே ரஷ்யா சொல்லியது. அதேபோல, தரைவழித் தாக்குதல்களையும் தொடங்கியபடி உக்ரைன் எல்லைக்குள் நுழைந்தது ரஷ்ய இராணுவம். "ரஷ்யா படையெடுத்து வந்த முதல் நாளில் உக்ரைன் நாட்டின் இராணுவ வீரர்கள், பொதுமக்கள் என சுமார் 130 பேர் பலியாகிவிட்டனர். கிட்டத்தட்ட 316 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

"விதிமுறைகளை மீறிக் குடியிருப்புப் பகுதிகளில் ரஷ்யா தாக்குதல்களை நடத்திவருகிறது. ரஷ்யத் தாக்குதல்களை உலக நாடுகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றன. எந்த நாடும் எங்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. நேட்டோ படைகளையும் காணவில்லை. இரண்டாவது நாளாகத் தனியாகப் போராடிக்கொண்டிருக்கிறோம். தயவுசெய்து உலக நாடுகள் உதவி செய்யவேண்டும்" என உக்ரைன் ஜனாதிபதி வேதனையோடு கேட்டுக்கொண்டார்.

நாடு அல்ல. அதனால் எங்கள் படைகளை உக்ரைனுக்குள் அனுப்ப முடியாது. எங்களது உறுப்பு நாடுகளான போலந்து, ஹங்கேரி உள்ளிட்ட நாடுகள்மீது ரஷ்யா கை வைத்தால், திருப்பி அடிக்கத் தயங்கமாட்டோம்" என கைவிரித்தது நேட்டோ.

அமெரிக்காவோ, 'எவ்வளவு வேண்டுமானாலும் ஆயுதங்களை அனுப்புகிறோம், ஆனால் தங்கள் நாட்டு இராணுவத்தினரை போருக்கு அனுப்பி வைக்க வாய்ப்பில்லை' என திட்டவட்டமாகத் தெரிவித்தது. அதன்பிறகு, அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கிடைக்கின்ற அதிநவீன ஆயுதங்களை வைத்து ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்கத் தொடங்கியது உக்ரைன். மேலும், உக்ரைன் மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யா மீது, அமெரிக்கா, ஐரோப்பியஒன்றியம், பிரிட்டன், கனடா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால், ரஷ்யாவின் ஏற்றுமதி, இறக்குமதி பெருமளவு பாதிக்கப்பட்டது.



எத்தனை தடைகளை விதித்தாலும் "மேற்குலக நாடுகளின் அச்சுறுத்தலில் இருந்து ரஷ்யாவை பாதுகாப்பதற்கான இலக்கை அடையும் வரை எங்களின் போர் தொடரும்" என ரஷ்யப் பாதுகாப்புத்துறை அமைச்சகம் அதிரடியாகத் தெரிவித்தது. ரஷ்யாவின் விடாப்பிடியான தாக்குதலால், உக்ரைனின் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புகள் என அத்தனைக் கட்டடங்களும் பாரபட்சமின்றி தகர்க்கப்பட்டன. ஏராளமான உயிரிழப்புக்கு மத்தியில், கோடிக்கணக்கான மக்கள் உக்ரைனை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தனர்.

குறிப்பாக, இந்தப் போர் தொடங்கிய சில மாதங்களிலேயே சுமார் 1 கோடியே 20 இலட்சம் உக்ரைன் மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர். சுமார் 50 இலட்சத்திற்கும் அதிகமானோர் அண்டை நாடுகளான ருமேனியா, ஹங்கேரி, மால்டோவா, ஸ்லோவாகியா ஆகிய நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். அதிகபட்சமாக, போலந்து நாட்டில் மட்டும் 36 இலட்சம் பேர் குடியேறியிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா அமைப்பு தெரிவித்தது.

**(19 ஆம் பக்கம் பார்க்க...)**



சிலம்பு

# தரம் கெட்ட பிரச்சாரங்களால் தலை குனியும் தலைவர்கள்

ஈரோடு இடைத் தேர்தல் களம் சூடாகியுள்ளது. காங்கிரஸும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் நேரடியாகப் போட்டியிடுகின்றன. ஆனால், அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில்தான் போட்டி நிலவுகிறது.

எடப்பாடி பழனிச்சாமியின் பிரச்சாரம் மிகவும் தரம் தாழ்ந்ததாக உள்ளது. அவருக்குப் பதிலளிக்கும் மாற்று அரசியல் தலைவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக தரம் குறைந்த பிரச்சாரத்தை மேற்கொள்கிறார்கள்.

ஈரோடு இடைத்தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன. அரசியல் கட்சித் தலைவர்களின் பேச்சுக்கள் தொண்டர்களுக்கு குஷியையும் தெம்பையும் தந்து வந்தாலும் அவைகள் வேறு சில மாதிரியான தாக்கங்களையும் ஏற்படுத்தி வருவதை நாம் சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது. அன்றைய காலகட்டத்தில், ஏராளமான கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும் தந்தை பெரியாரும் மூதறிஞர் ராஜாஜியும் பரஸ்பர நட்புறவு கொண்டிருந்தனர். ஒருவரையொருவர் மரியாதை கொடுத்தனர். அதேபோல, கர்மவீரர் காமராஜரும் - அறிஞர் அண்ணாவும் சிறந்த முதல்வராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியதுடன் பல விடயங்களில் இருவரும் இணைந்தே செயல்பட்டனர்.

அதேபோல மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் - தி.மு.க தலைவர் கருணாநிதி இருவரும் எதிரெதிர் துருவங்களாக இருந்து பணியாற்றினாலும் அவர்களுக்குள்ளேயான நட்பும் மரியாதையும் இறுதி வரை குறையாமல் இருந்தது. கருணாநிதியும் ஜெயலலிதாவும் கண்ணியத்தையும் வார்த்தை வரம்புகளையும் இறுதிவரை கடைப்பிடித்தனர். மறைந்த ஜெயலலிதா, பிரச்சார பொதுக்கூட்டங்களில் பேசும்போதாகட்டும் தி.மு.கவை வசைபாடுவதாகட்டும் அதிலேயும்கூட ஒரு அளவுகோலைத் கடைப்பிடித்தார். அதைப்போன்று, தி.மு.க தலைவர் கருணாநிதியும் ஜெயலலிதாவை, “அந்த அம்மையார்” என்றேதான் அழைத்தார். இத்தகைய அரசியல் நாகரிகம்தான் இரண்டு திராவிட கட்சிகளின் வெற்றிக்கு முக்கியமான அஸ்திரமாக இருந்தது. இதனால்தான் இவர்களது அறிக்கைகள்கூட வெகுஜன மக்களை எளிதாகச் சென்றடைந்து சிந்திக்கவும் வைக்க செய்தது. கண்ணிய பேச்சுக்கள் தமிழகத்தில் நல்ல மாதிரியாக இப்படி சென்றுகொண்டிருந்த அரசியல் நாகரிக களம் தற்போது தடம் மாறி பயணித்துக் கொண்டிருப்பது வேதனையைத் தந்து வருகிறது.

வழக்கமாக தேர்தல் என்றாலே, ஆளும்கட்சியை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதும் எதிர்க்கட்சிகளை ஆளும் கட்சி தூற்றுவதும் என மாறி மாறி பிரச்சாரங்களில் நடப்பது இயல்புதான். குறைகளையும் புகார்களையும் விமர்சிப்பதும் இயல்புதான். அதேசமயம், தடித்த வார்த்தைகளை, கண்ணியம் நிறைந்த பிரச்சாரங்களை முன்வைப்பதும் அவசியமாகிறது. எடப்பாடி பழனிச்சாமியும் தன்னுடைய வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது, “நீ சரியான ஆம்பளையா இருந்தால்.. மீசை வச்ச ஆம்பளையா இருந்தால். வேட்டி கட்டின ஆம்பளையா இருந்தால். நேராக வெளியே வந்து மக்களை சந்தி. உங்களுக்கு திராணி கிடையாது. தெம்பு கிடையாது. அ.தி.மு.கவை நேரடியாகச் சந்திக்கும் திறமை கிடையாது. சூடு, சொரணை, வெட்கம், மானம் இருந்தால் வெளியே வந்து வாக்காளரைச் சந்தி. ஏழைக்கு நீ காசு கொடுத்து கூட்டி வந்து தங்க வைத்திருக்கிறாயே, அவர்களை வைத்து வாக்கு போட சொல்கிறாயே. அ.தி.மு.கவை எதிர்க்கும் திறன் உங்களுக்கு ஏன் இல்லை” என்று பொதுமக்கள் முன்னிலையில், பிரச்சாரத்தில் கேட்டிருந்தார். தடித்த வார்த்தை இதெல்லாம் பேசியது எடப்பாடிதானா? என்ற சந்தேகத்தில் தமிழக மக்கள் உறைந்தனர்.

எடப்பாடியைப் பொறுத்தவரை, யாராக இருந்தாலும் கடுமையாக விமர்சிக்கக்கூடியவர். நேரடியாகவும் துணிச்சலாகவும் எதிர்த்தரப்பினரை கேள்விகளால் துளைக்கக் கூடியவர். செய்தியாளர்கள் சந்திப்பு என்றாலும்கூட, தன் ஆதங்கத்தையும் கோபத்தையும் வெளிப்படையாகவே காட்டிக் கொள்பவர். ஆனால், அவர் முதல்வராகப் பதவி வகித்தபோதும் சரி, எதிர்க்கட்சியாக பதவியில் உள்ளபோதும்சரி, இத்தனை வருட காலத்தில் தி.மு.கவை தடித்த வார்த்தைகளால் எடப்பாடி பழனிச்சாமி விமர்சித்ததே கிடையாது. ஆனால், முதல் முறையாக இந்த ஆண்மை விவகாரம் சோஷியல் மீடியாவில் விவாதத்தையும் கேள்விகளையும் கண்டனங்களையும் சுமந்து திரிந்தது. ஆம்பளையா? “நீ ஆம்பளையா இருந்தால் என் ஊருக்கு வந்து பாரு” என்று ஸ்டாலினுக்கு, அன்று ராஜேந்திர பாலாஜி பொதுவெளியில் சவால்விட்டபோதே, அவரை எடப்பாடி கூப்பிட்டு கண்டிக்கவில்லை என்பதை தி.மு.கவே பலமுறை சுட்டிக்காட்டியிருந்தது. முதுகெலும்பில்லாதவர்கள் அ.தி.மு.கவினர் என பா.ஜ.க தலைவர்கள் ஒருமுறை கூறி இருந்தனர்.



இப்போது ஆச்சரியம் என்னவென்றால், தி.மு.க தரப்பிலேயே அப்படிப்பட்ட தடித்த வார்த்தைகள் வெடித்துள்ளதுதான் வியப்பாக பார்க்கப்பட்டு வருகிறது. அமைச்சர் உதயநிதி பேசும்போது, “காலில் விழுந்து முதல்வரானவர் மீசையை பற்றி பேசுகிறார் என்று ஈ.பி.எஸ்க்கு அமைச்சர் உதயநிதி பதிலடி கொடுத்துள்ளார். 2 பெண்மணிகளின் செருப்படிக்கு பாலிஷ்போடும் பிரஷ் ஆக இருந்தது அவரது மீசை” என்றார் உதயநிதி, நாகரிக ஸ்டாலின் எடப்பாடியின் தரம்தாழ்ந்த மீசை விமர்சனத்துக்கு பதில் தருவதாக நினைத்து, இன்னொரு தரம்தாழ்ந்த வார்த்தைகளையே உதயநிதி வீசியிருப்பாகத் தெரிகிறது. எவ்வளவுதான் எல்லை மீறிய கோபம் என்றாலும் முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சிகளை இதுவரை இப்படிப்பட்ட வார்த்தைகளை எங்குமே பயன்படுத்தியது கிடையாது. யாரையுமே மலிவான வார்த்தைகளில் விமர்சித்ததும் கிடையாது. ஆனால், உதயநிதியின் இழிவிமர்சனங்கள், பேச்சுக்கள் லேசாக அதிர வைத்ததாகவே தெரிகிறது. இப்போதைக்கு தி.மு.கவின் மொத்த பலமும்சரி, வருங்காலமும் சரி, உதயநிதியை முன்னிறுத்தியே அரசியல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சமூகத்தையே புரட்டிப் போடும் சக்தி படைத்த இளைஞர் அணியை தன் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் நிலையில், தடித்த வார்த்தைகளை பயன்படுத்தியதை எளிதாக எடுத்துக்கொண்டு கடந்து விட முடியவில்லை.

பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை, செங்கல் திருடன் என்ற வார்த்தையை பயன்படுத்தி உதயநிதியை விமர்சித்துள்ளது. அதைவிட அதிர்ச்சியை கூட்டிவருகிறது. ஆன்மிகத்துடனும் அறநெறியுடனும் வாழ்கிறோம் என்றும் தமிழகத்தில் தாமரை மலர வைக்காமல் விடமாட்டோம் என்றும் சொல்லிக்கொள்ளும் பா.ஜ.க தலைவர்களா இப்படி பேசுவது என்ற ஆச்சரியம் சூழ்ந்துள்ளது. இத்தனை காலம் தமிழக பா.ஜ.க தலைவராக இருந்த டாக்டர் தமிழிசை சௌந்தராஜன், இப்படிப்பட்ட வார்த்தைகளை ஒருக்காலும் பயன்படுத்தியது கிடையாது. “குமரியார் மகள் அரசியல் நாகரிகத்துடன் இருப்பார்” என்றும் “மக்கள் விரோத கட்சியிலே அங்கம் வகித்தாலும் அவரது அடிப்படை குணம் ஒருபோதும் மாறாது” என்றும் கருணாநிதியே ஒருமுறை மனம்திறந்து பாராட்டியிருந்தார். அப்படிப்பட்ட கட்சியின் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ள அண்ணாமலை, தன் கட்சிக் கொள்கைகளை வலியுறுத்தாமல், எதிர்க்கட்சிகளின் அரசியலை விமர்சிக்காமல், அவர்களின் தவறுகளைக் கண்டிக்காமல், உதயநிதியின் ஒற்றை செங்கல் குறித்துப் பேசியுள்ளார். கடிவாளம் ஆகமொத்தம், ஈரோடு இடைத்தேர்தல் எல்லா வகை அநாகரிக பேச்சுக்களுக்கும் சாட்சியாகியுள்ளது. இந்த தலைவர்களின் பேச்சுக்கள், விளிம்பு நிலை மக்களின் வலிகளையோ, அவர்களின் தேவைகளையோ, அழுத்திச் சொல்வது போல தெரியவில்லை.. ஆனால், எல்லை மீறி போய்க்கொண்டிருக்கும் தனிநபர் வார்த்தைத் தாக்குதல்களுக்கு கடிவாளம் போடப்பட்டே ஆக வேண்டி உள்ளது. மீண்டும் ஒரு கண்ணியமான கலாசார சூழலுக்குள், அரசியல் நாகரிக சூழலுக்குள் நாம் திரும்பிவர வேண்டிய அவசியமும் நெருக்கடியும் இன்றைய தினம் ஏற்பட்டுள்ளது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்ய வேண்டி உள்ளது. ■

# சீக்கியர்களின் அபிலாசைகள்

லோகன் பரமசாமி

சர்வதேசமெங்கும் பரந்து வாழும் இனங்களில் தமிழ் இனம் போலவே மிகவும் கடின உழைப்பில் நம்பிக்கை வைத்து வாழும் இனங்களில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை தமது தாயகமாகக் கொண்ட சீக்கிய இனமும் ஒன்றாகும். இந்திய ஆக்கிரமிப்பிலிருந்து தமது தாயகத்தை மீட்கும் பொருட்டு தாம் இடம் பெயர்ந்து வாழும் நாடுகளில் சீக்கிய இனத்தவர்கள் மத்தியில் தற்பொழுது பொதுஜன வாக்கெடுப்பு நடாத்தி வருகின்றனர்.

இது வரையில் இடம் பெற்ற வாக்கெடுப்புகளின் அடிப்படையில் இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, இத்தாலி, கனடா போன்ற நாடுகளில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சத்து எட்டாயிரம் சீக்கியர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர். 2020ஆம் ஆண்டிலிருந்து கட்டம் கட்டமாக ஒவ்வொரு நாடுகளிலும் தமது புலம்பெயர் சமுதாயத்தின் மத்தியில் இந்த வாக்கெடுப்புகளை நடாத்தி வருகின்றனர்.




சர்வதேச நீதி அமைப்பு முறையின் கீழ் சட்டம் ஒழுங்கு ஆகியனவற்றின் ஊடாக தாம் தனித்துவமான சுயநிர்ணயம் கொண்ட ஒரு அரசை உருவாக்கிக் கொள்வதற்கான அபிலாசைகளை வெளிக்காட்டும் நோக்கத்துடன் இந்த வாக்கெடுப்புகள் இடம் பெறுவதாக இதனை ஒழுங்கு செய்துள்ள நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு கூறி வருகிறது. அத்துடன் நியாயகரமான சர்வஜனவாக்கெடுப்பு என்பது அங்கீகாரம் கொண்ட நிறுவப்பட்ட ஒரு சர்வதேச சட்ட முறை என இந்த அமைப்பு நம்புகிறது.

1947 இல் சுதந்திர இந்தியா அறிவிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே பஞ்சாப்பிராந்தியத்தைச் சேர்ந்த சீக்கிய இனத்தவர்கள் தமது தாயகத்தை காலிஸ்தான் என்று அழைத்து வந்தனர். காலிஸ்தான் சுதந்திர கோரிக்கை படிப்படியாக பல சிரமங்களின் மத்தியில் வளர்ந்து வந்தது. இது 1980 களின் ஆரம்பத்தில் மிக முக்கியமான திருப்புமுனைகளைக் கண்டது. இந்தக் கோரிக்கை போராட்டமாக மாறிய போது 1984 ஆம் ஆண்ட ஜூன் மாதம் அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியால் மிகக்கடுமையாக நசுக்கப்பட்டது.

காலிஸ்தான் விடுதலைப் போராட்டத் தலைவர் பிந்தரன்வாலே உட்பட சுமார் 300 வரையான சீக்கியர்கள் அவர்களின் புனித தலமாக கருதப்படும் பொற்கோயிலில் வைத்து கொல்லப்பட்டனர். நீல நட்சத்திர நடவடிக்கை என்ற பெயரில் இடம் பெற்ற இந்த இராணுவ நடவடிக்கை இந்திய வரலாற்றில் மிகக் கொடுமையானது என்று சீக்கியர்கள் கருதுகின்றனர்.

ஆனால், இந்தப் படுகொலை இடம்பெற்ற மூன்றே மாதத்தில் பிரதமர் இந்திரா காந்தி அவரது சீக்கிய காவலர்களால் படுகொலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து வன்முறைகள் சீக்கிய மக்கள் மீது மிகக்கடுமையாக கட்டவிழ்த்து விடப்பட்டது. அரசுக்கு ஆதரவான சீக்கிய உளவுக் குழுக்கள், பொலிஸார் மற்றும் காடயர்கள் ஊடாக பாரிய கொடுமைகள் இழைக்கப்பட்டன. சுமார் மூவாயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாக அரச புள்ளி விபரங்கள் தெரிவிக்கும் அதேவேளை பதினையாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக சீக்கிய தரப்பினர் கூறுகின்றனர்.

மேலும், சுதந்திர காலிஸ்தான் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் இன்னமும் விசாரணைகள் எதுவுமின்றி காவலில் வைக்கப்பட்டு உள்ளதாக செய்திகள் கூறுகின்றன. ஏராளம் சீக்கியர்கள் நாட்டை விட்டு தப்பி ஓடினர். புலம்பெயர் நாடுகளில் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

இவர்கள் பல நாடுகளிலும் தமது சுதந்திரத்திற்கான கருத்தாதரவுகளை உருவாக்குவதில் மிகவும் மும்முரமாக செயற்பட்டு வருகின்றனர். தற்பொழுது பஞ்சாப் பொதுஜன வாக்கெடுப்பு ஆணையம் ஒன்றை உருவாக்கி அதனை அரச சார்பற்ற நிறுவனமாக சர்வதேச நாடுகள் எங்கிலும் பதிவு செய்து உள்ளனர். இந்த ஆணையம் தமது அபிலாசைகளுக்கு அமைதியான விழிகளில் தீர்வு காணுதல் என்பதை மையமாகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த ஆணையத்தின் அடுத்த கட்ட வாக்கெடுப்பு அவுஸ்திரேலிய சீக்கிய புலம்பெயர் சமுதாயத்தின் ஆணையை பெறும் வகையில் இம்மாதம் 26 ஆம் திகதி மெல்பேன் நகரில் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இதில் விசேடமான விடயம் என்னவெனில் இந்த சர்வஜன வாக்கெடுப்புகளை நடாத்துவதற்கான சிந்தனையை தாம் தமிழர்களிடம் இருந்தே பெற்றுக் கொண்டதாக அவர்களது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளனர்.

2009 - 2010 ஆம் ஆண்டுகளில் புலம்பெயர் தமிழ் மக்கள் தமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு மேலை நாடுகளிலும் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தி இருந்தனர். ஆனால், இந்த வாக்கெடுப்பிற்கு போதுமான ஊடக மரியாதை கொடுக்கப்படவில்லை அத்துடன் அரசியல் தாக்கத்தில் மிகச்சிறிய அளவிலேயே ஏற்படுத்த முடிந்தது என்பதுடன் அந்த வாக்கெடுப்பு மிகச் சிறந்த வகையிலான நடைமுறை அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதுவும் சீக்கியர்களது பார்வையாக உள்ளது.

ஆகவே தமது வாக்கெடுப்புகளை சர்வதேச நெறிமுறைகளை அதிக அளவில் இறுக்கமாக பின்பற்றும் வகையில் ஒழுங்கு செய்வதன் கட்டாயத்தை உணர்த்தி வருகின்றனர். அத்துடன் தமது சமுதாய உறுப்பினர்களை அதிக அளவிலான மேலைத்தேய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கி ஈமெயில் போராட்டங்களை நடாத்துவதற்கும் கருத்தாதரவு வெளியீடுகளை அனுப்பி வைப்பதற்கும் இடைவிடாத நிகழ்ச்சித்திட்டங்கள் வகுக்கப்பட்டு இதற்கான அறிவூட்டல்களும் இடம்பெற்று வருவதாக நீதிக்கான பஞ்சாப் அமைப்பு தனது அறிக்கையில் கூறி உள்ளது. நியாய பூர்வமான தமது அபிலாசைகளை வெளிப்படுத்துதல் என்பதை மையமாகக் கொண்ட இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக இந்திய அரசின் நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக அமைந்துள்ளது. நீதிக்கான சீக்கியர்களின் அமைப்பு 2019 ஜூன் 10 ஆம் திகதி இந்தியாவில் சட்டத்திற்கு புறம்பான அமைப்பாக தடை செய்யப்பட்டது. இது ஒரு பிரிவினைவாத தரப்பாக முத்திரை குத்தப்பட்டு உள்ளது.


இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையின் அறிக்கைகளின் படி இந்த ஆணையத்தின் இந்திய எதிர்ப்பு கோட்பாடுகளை வளர்ச்சியடையச் செய்யும் நடவடிக்கைகளை எதிர்த்து இந்திய அரசாங்கம் கனேடிய அரசாங்கத்திற்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இருந்த போதிலும் கனேடிய அரசாங்கம் சீக்கிய சமுதாயம் தனது அபிலாசைகளை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்து வரும் ஜனநாயக வளியிலான நடவடிக்கைகளை தடுப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

சீக்கிய சமுதாயமோ சர்வதேச அளவில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தம் செயற்பாடுகளை கைவிடவில்லை. மேலும், பயங்கரவாத நடவடிக்கைகளாக சித்தரிப்பதையும் பொதுவான எதிர்க் கருத்துகொண்ட மக்களை கடுமையான தேசதுரோக குற்றச்சாட்டுகள் மூலம் பொய் பிரச்சாரங்களை செய்து வருவதாகவும் கூறுகின்றனர். தம்மை ஒரு குற்ற சமுதாயமாக இந்திய மத்திய அரசு சித்தரித்து வருவதாக சீக்கியர்கள் கருதுகின்றனர். இருந்த போதிலும் தம் மீது நடாத்தப்பட்ட இன அழிப்புகள் இடம்பெற்று சுமார் 40 ஆண்டுகளை எட்டுகின்ற போதிலும் தமது போராட்டத்தினை சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட நெறி முறைகளில் இருந்து தவறாது செயற்பட்டு வருகின்றனர். ■

முருகபூபதி

# மக்கள் வங்கி முகாமையாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் மக்களின் எழுத்தாளரான கதை!

27 முதல் சந்திப்பு




ஒரு படைப்பாளி எதனை எழுதினாலும் அவ்வெழுத்து வாசகரின் கவனத்தை ஈர்க்காதுவிட்டால் காணாமல் போய்விடுவார்.

நவீன தொழில்நுட்ப வசதிகள் பெருகியிருக்கும் சமகாலத்தில், படைப்பாளரின் ஆக்கம் உடனுக்குடன் பதிவேற்றம் கண்டுவிடும்.

ஆனால், முன்பு இந்த நிலை இல்லை. ஒரு பத்திரிகைக்கு அல்லது இலக்கிய இதழுக்கென எழுதும் படைப்பினை தபாலில் அனுப்பி, அது வெளிவரும்வரை காத்திருக்கவேண்டியிருந்தது.

இன்று முற்றாக நிலைமை மாறிவிட்டது. காகித அச்சில் வெளிவரும் ஊடகங்கள், இத்தனை சொற்களுக்குள் எழுதுங்கள் எனக் கேட்கின்றமையால், படைப்பாளிகள், தாம் எழுதியவற்றை பிழை திருத்தி செம்மைப்படுத்தும்போது எத்தனை சொற்கள் வந்துள்ளன என்பதையும் கூர்ந்து பார்த்துவிட்டே அனுப்ப நேர்ந்துள்ளது.

இந்தச்சங்கடங்கள் இல்லாத ஒரு காலத்தில் எழுதத்தொடங்கியவர்தான் யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

1997 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நான் இலங்கை சென்றிருந்தவேளையில் மல்லிகை ஜீவா எனக்குத்தந்த கதைத் தொகுதிதான் உணர்வின் நிழல்கள். எழுதியிருந்தவர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

ஜீவா இந்தத் தொகுதியை என்னிடம் தரும்போது, இதனை எழுதியவர் யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக்கிளையொன்றின் முகாமையாளர் என்ற தகவலையும் சொன்னார்.

வடபுலத்தில் அப்போது போர்மேகங்கள் சூழ்ந்திருந்தமையால் அந்தப்பயணத்தில், என்னால் யாழ்ப்பாணம் செல்லமுடியாதுபோய்விட்டது. அதன்பின்னர், 2010 ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, நல்லூர் ஆதீனத்தில் ஒரு இலக்கிய சந்திப்பில் எதிர்பாராதவகையில் யோகேஸ்வரி அவர்களைச் சந்தித்தேன்.

எனினும் நீண்டநேரம் அவருடன் கலந்துரையாட முடியாதுபோய்விட்டது.

யோகேஸ்வரியின் கதைகளை அவ்வப்போது படிக்கநேர்ந்தது. மீண்டும் ஒரு தடவை இலங்கை வந்தசமயம் வடமராட்சிக்குச் சென்றுவிட்டு திரும்பும்போது, நான் பயணித்த வாகனச்சாரதியிடம் , " தம்பி... இடையில் வரும் கோப்பாயில் ஒரு எழுத்தாளரைச் சந்திக்கவேண்டும். ஆனால், அவருடைய வீடுதான் எங்கிருக்கிறது என்பது தெரியவில்லை. அவர் வங்கிமுகாமையாளர். இந்தப்பகுதியில் எவருக்கும் தெரிந்திருக்கும். விசாரித்துப்போம்" என்றேன். இவ்வாறு நான் அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தபோது, வலது புறத்தில் பிரதேச செயலகம் தென்பட்டது.

வாகனத்தை அங்கே திருப்பச்செய்து, உள்ளே சென்று யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களின் வீட்டை விசாரித்தேன். பதில் கிடைத்தது. அந்த வீடும் அருகில்தான் இருந்தது.

அந்த இரண்டாவது சந்திப்பில் இவருடன் நீண்டநேரம் பேசமுடிந்தது.

இவரது பெற்றோரின் பூர்வீகம் வட இலங்கையாயிருந்தபோதிலும், பிறந்தது மலேசியாவில் கோலாலம்பூரில்.

சின்னத்துரை - கமலாம்பிகை தம்பதியரின் அருமை மகள். ஆரம்பக்கல்வியை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்திலும் மலேசியாவில் இம்பிறோட் தமிழ் வித்தியாலயத்திலும் தொடர்ந்துவிட்டு, தனது உயர்தர வகுப்பிற்காக பண்டத்தரிப்பு மகளிர் உயர் நிலைப்பாடசாலைக்கு வந்துள்ளார்.

பின்னர் பேராதனை பல்கலைக் கழகம் பிரவேசித்து பட்டதாரியாகி, வங்கித்துறையில் உதவி முகாமையாளர் பிரதி முகாமையாளர் , முகாமையாளர் முதலான பதவிகளில் 1972 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

தற்போது, பிள்ளைகளின் அழைப்பினால், இங்கிலாந்து வாசியாகிவிட்டார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திற்கு முன்பிருந்தே இலக்கியப் பிரதிகள் எழுதிவந்திருக்கும் இவரது ஆக்கங்கள் கொழும்பிலிருந்து வெளியான தந்தை செல்வநாயகத்தின் சுதந்திரன் பத்திரிகையில் இடம்பெற்றிருக்கின்றன.

இலங்கை வானொலியில் வ.இராசையா மாஸ்டர் இளைஞர்கள் - யுவதிகளுக்கான தொடர் நிகழ்ச்சியை நடத்திய 1960 - 1970 காலப் பகுதியில் யோகேஸ்வரி தனது ஆக்கங்களை தபாலில் அனுப்பியிருக்கிறார். அவற்றை ஒலிபரப்பியிருக்கும் இராசையா மாஸ்டர் தேர்ந்த வாசகர். எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக கொழும்பில் தமிழ்க்கதைஞர் வட்டம் (தகவம்) என்ற அமைப்பினை உருவாக்கியவர்.



அவரது அறிமுகம் கிடைத்தமையினால், மல்லிகை ஜீவாவுக்கு யோகேஸ்வரியின் அறிமுகமும் கிடைத்தது. அதன் பெறுபேறுதான் யோகேஸ்வரியின் உணர்வின் நிழல்கள். அதனை மல்லிகை ஜீவா எனக்கு அறிமுகப்படுத்தியதனால், பின்னாளில் யோகேஸ்வரியின் அறிமுகம் எனக்கும் கிடைத்தது. இந்தப் பதிவை தற்போது நான் எழுதுவதன் மூலம், யோகேஸ்வரி மேலும் பல புதிய இளம் தலைமுறை வாசகர்களுக்கு அறிமுகமாகலாம்.

இவ்வாறுதான் ஒரு படைப்பாளி வாசகர் பரப்பில் அங்கீகாரம் பெறுகிறார்.

யோகேஸ்வரியின் படைப்புத்திறனை தகவம் இராசையா மாஸ்டர், ஜீவாவிடம் சொன்னதும் மல்லிகைப்பந்தல் வெளியீடாக இவரின் கதைகளை வெளியிட ஜீவா விரும்பியிருக்கிறார்.

யோகேஸ்வரியும் தனது பிரதிகளை ஒரு கோவையில் வைத்துக் கொடுத்துள்ளார். அந்தப் போர்க்கால நெருக்கடியில் ஜீவா கொழும்புக்கு சென்றிருந்தபோது, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிக்கும் காங்கேசன் துறை வீதிக்கும் குறுக்கே செல்லும் சந்தியில் அமைந்திருந்த மல்லிகை காரியாலயம் இராணுவத்தின் எறிகணை வீச்சினால் சேதமடைந்தது.

அங்கிருந்த அலுமாரியிலிருந்த யோகேஸ்வரியினதும் மற்றும் சில எழுத்தாளர்களினதும் இலக்கியப் பிரதிகளும் தெருவில் வீசப்பட்டிருந்தன. நிலைமையை பார்ப்பதற்காக அவ்விடம் சென்ற மல்லிகை அச்சுக்கோப்பாளர் சந்திரசேகரம் அண்ணர், கிடைத்தவற்றை சேகரித்து கொழும்புக்கு அனுப்பினார்.

அதனால் நாம், யோகேஸ்வரியின் உணர்வின் நிழல்கள் தொகுப்பினை படிக்கின்றோம்.

ஈஸ்வரி, துளசிராணி, வாடாமலர், முதலான புனைபெயர்களிலும் எழுதிவந்திருக்கும் யோகேஸ்வரி வெளியிட்டிருக்கும் **இதர கதைத் தொகுப்புகள் :** ஈன்ற பொழுதில், கணநேர நினைவலைகள், மனம் விந்தையானதுதான், இன்னும் பேசவேண்டும், தாலி. **சமயம் சார்ந்தவை :** அரை நிமிட நேரம், முன்னோர் சொன்ன கதைகள். **நடைச் சித்திரம் :** எண்ணிலா குணமுடையோர். **கடித இலக்கியம் :** (மகளிருக்கு) உனக்கொன்றுரைப்பேன். **கட்டுரைகள் :** ஒளி வளர் தீபங்கள். **தொகுப்புகள் :** இருபாலை சேனாதிராய முதலியாரின் ஆக்கங்கள், வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்.

உணர்வின் நிழல்கள் தொகுப்பிலிருக்கும் சோகங்களும் சுமைகளாகி என்ற சிறுகதை, தென்னாசிய நாடுகள் பலவற்றில் செயற்படும் மகளிர் அமைப்புகளின் ஒன்றிணைந்த இயக்கமான "சார்க்" அமைப்பின் சிறந்த சிறு கதைக்கான விருதைப்பெற்றுள்ளது.

இரசிகமணி கனகசெந்தி கதா விருது, சிரித்திரன் சுந்தர் விருது, வலி.கிழக்கு அருள் நெறி மன்றத்தின் விருது, யாழ்.உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா விருது உட்பட பல இலக்கிய விருதுகள் பெற்றிருக்கும் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் கவனத்திற்குரியவர்.

■




# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

**58**

ரமணி

தமிழ்ச் சினிமாவில் வாய்ப்புத்தேடி அலைந்த வாலி களைத்துப்போனார். கவிஞர் கண்ணதாசனையே திரை உலகினர் பெரிதும் நம்பினார்கள். அவர் பாடல்கள் கொடுக்கத் தாமதமானாலும் காத்திருந்து பாடல்களைப் பெற்றனர். எம்.ஜி.ஆருக்காக கண்ணதாசன் எழுதிய பாடல்கள் பட்டி தொட்டி எங்கும் ஒலித்தன. வாய்ப்புத் தேடி தவமிருந்த வாலி தனக்குக் கிடைத்த சின்னச் சின்ன வாய்ப்புகளைப் பயன்படுத்தி தனது திறமையை வெளிப்படுத்தினார்.

எம்.ஜி.ஆருக்காக தெய்வத்தாய், படகோட்டி ஆகிய படங்களுக்கு வாலி பாடல்கள் எழுதினார். அந்த இரண்டு படங்களின் பாடல்களும் மக்களுக்குப் பிடித்து விட்டதால் எம்.ஜி.ஆரின் மனதில் வாலி இடம் பிடித்தார்.

எம்.ஜி.ஆர் -கண்ணதாசன் என்ற வெற்றிக் கூட்டணிக்குள் வாலியும் இணைந்தார். எம்.ஜி.ஆர், வாலி கூட்டணியிலும் பாடல்கள் பிரமாதமாக இருந்தன. 58 ஆம் ஆண்டு ‘அழகர்மலைக் கள்வன்’ என்ற படத்தில் பாட்டெழுதத் தொடங்கினார் கவிஞர் வாலி. படத்திற்கு ஒரு பாடல் எழுதி வந்தார். அந்தப் படமும் ஆடிக்கொரு முறை அமாவாசைக்கு ஒருமுறை கிடைத்து வந்தது. 61 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் நடித்து, அறிஞர் அண்ணாவின் வசனத்தில் வந்த ‘நல்லவன் வாழ்வான்’ படத்தில் ஒரு பாடல் எழுதினார். பாட்டு ஹிட்டானது என்றாலும் கண்ணதாசன் - எம்.ஜி.ஆர் கூட்டணி வலுவாக இருந்த காலம் அது.

முக்தா சீனிவாசனின் இயக்கத்தில், ஜெமினி கணேசன் நடித்த ‘இதயத்தில் நீ’ படத்தில் கண்ணதாசனும் மாயவநாதனும் வாலியும் எழுதியிருந்தார்கள். மாயவநாதனும் மிகச்சிறந்த பாடலாசிரியர்தான். சொல்லப்போனால், மாயவநாதன் எழுதிய பல பாடல்கள், கண்ணதாசன் எழுதிய பாடல்கள் என்று கொண்டாடப்பட்டன. அந்த அளவுக்கு மாயவநாதன் பாடல்கள் எழுதி பிரபலமாகியிருந்தார். பின்னாளில், வாலியின் பாடல்களைக் கேட்டுவிட்டு, கண்ணதாசன் பாடல்கள் என்று பலரும் கொண்டாடினார்கள். இன்றைக்கும் கண்ணதாசன் பாட்டு என்று பட்டிமன்றமே நடத்திக்கொண்டிருக்கிறார்கள் ரசிகர்கள்.

‘இதயத்தில் நீ’ படத்தில் வாலி எழுதிய பல பாடல்கள், மிகப்பெரிய வெற்றியைப் பெற்றன. 63 ஆம் ஆண்டு இந்தப் படம் வெளியான அதே காலகட்டத்தில், இயக்குநர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில், ‘கற்பகம்’ படம் வெளியானது. இந்தப் படத்தில் முதன்முதலாக எல்லாப் பாடல்களையும் எழுதினார் வாலி. பெண் குரல் கொண்ட எல்லாப் பாடல்களுமே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றன.

இதே சமயத்தில், பாலசந்தரின் கதை, வசனத்தில், கிருஷ்ணன் - பஞ்சு இயக்கத்தில், ஏ.வி.எம் தயாரிப்பில் வெளியான ‘சர்வர் சுந்தரம்’ படத்தில் ‘அவளுக்கென்ன’ பாடலை எழுதினார். இன்று வரைக்கும் அந்தப் பாடல் ஹிட் லிஸ்ட் வரிசையில் இருக்கிறது. 64 ஆம் ஆண்டில், எம்.ஜி.ஆர் நடித்த ‘தாயின் மடியில்’ படத்திற்கு வாலியும் பாட்டு எழுதினார். இந்த வருடம்தான் ‘தெய்வத்தாய்’ படம் வெளிவந்தது

‘இந்தப் புன்னகை விலை’ என்ற பாடல், ‘வண்ணக்கிளி சொன்னமொழி என்ன மொழியோ?’, என்ற பாடல், ‘ஒருபெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்’ என்ற பாடல் என எல்லாப்பாடல்களும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றன. எல்லாப் பாடல்களையும் வாலி எழுதினார். இந்தப் படத்தில் இன்னொரு பாடலும் உண்டு. அது எம்.ஜி.ஆரின் திரைப் பயணத்தில் டாப் கியர் எடுப்பதற்கும் அரசியல் வாழ்வில் பல படிகள் முன்னேறுவதற்கும் காரணமாக அமைந்தது. அந்தப் பாடல் ‘மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்’. இந்தப் பாடல், எம்.ஜி.ஆரை மிகப்பெரிய உயரத்தில் இருந்து உச்சத்திற்குக் கொண்டு சென்றது. வாலியை உயரத்திற்குக் கொண்டு சென்றது.

இதையடுத்து, இதே 64 ஆம் ஆண்டில், ஜி.என்.வேலுமணி தயாரிப்பில், டி.பிரகாஷ்ராவ் இயக்கத்தில், மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையில், எம்.ஜி.ஆர், சரோஜாதேவி, நம்பியார், நாகேஷ், மனோரம்மா நடிப்பில் வெளியானது ‘படகோட்டி’.

இந்தப் படத்தில், ஒரேயொரு பாட்டெழுதத்தான் வாலியை அழைத்தார்கள் என்றும் அந்தப் பாட்டு எம்.ஜி.ஆருக்கு ரொம்பவே பிடித்துப் போனதால் எல்லாப் பாடல்களையும் வாலியைக் கொண்டே எழுதவைத்தார் என்றும் சொல்லுவார்கள்.

எம்.ஜி.ஆர் படத்துக்கு எல்லாப் பாடல்களுமே வாலி எழுதியது ‘தெய்வத்தாய்’ படத்தில்தான். இதன் பின்னர் ‘படகோட்டி’ படத்தில் எல்லாப் பாடல்களும் எழுதினார்.

‘அழகு ஒரு ராகம் ஆசை ஒரு தாளம்’ என்றொரு பாடல். ‘என்னை எடுத்து தன்னைக் கொடுத்து’, என்றொரு பாடல். ‘கல்யாணப் பொண்ணு கண்ணான கண்ணு’, ‘தொட்டால் பூமலரும்’, ‘பாட்டுக்குப் பாட்டெடுத்து’ என்ற பாடலும் ‘நானொரு குழந்தை நீயொரு குழந்தை’ போன்ற பாடல்கள் அனைத்துமே அப்படியொரு ஹிட்டைப் பெற்றன.

மீனவர்களின் வாழ்க்கையை கதைக்களமாகக் கொண்ட இந்தப் படத்தில், இன்னும் இரண்டு பாடல்கள் எழுதியிருந்தார் வாலி. ‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான்’ என்ற பாடலும் ‘தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்’ என்ற பாடலும் அடைந்த வெற்றிக்கு அந்தக் கடல்தான் எல்லை.

மீனவக் குடும்பங்களில் என்றில்லாமல், ஒட்டுமொத்த தமிழகத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய இந்தப் பாடல்களும் டி.எம்.எஸ், சுசீலாவின் குரலும் இன்னும் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. ‘ஒருநாள் போவார் ஒருநாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம்’ என்பன போன்ற வரிகள், கடலில் கால் வைக்காதவர்களின் மனங்களையும் அசைத்து உலுக்கியது.


எம்.ஜி.ஆரின் மறக்கமுடியாத பட வரிசையில் ‘படகோட்டி’க்கு இடம் உண்டு. கவிஞர் வாலியின் திரை வாழ்வில் ‘படகோட்டி’க்கு இடமுண்டு. 1964 ஆம் ஆண்டு, நவம்பர் 3 ஆம் திகதி வெளியான ‘படகோட்டி’ படம் வெளியானது. 56 ஆண்டுகளானாலும் ‘தொட்டால் பூமலரும்’, ‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான்’, ‘தரைமேல் பிறக்கவைத்தான்’ முதலான பாடல்களை மறக்கவே முடியாது!

‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான்’, ‘தரைமேல் பிறக்கவைத்தான்’, ‘தொட்டால் பூ மலரும்’, ‘பாட்டுக்குப் பாட்டெடுத்து’... எம்.ஜி.ஆர் - வாலி கூட்டணியின் 2 ஆவது மெகா ஹிட் பாடல்கள்! ■






# என்ன பிரச்சினை?






# கால் கடுக்க காத்திருக்கும் வாடிக்கையாளர்கள்

நவீன தொழில் நுட்பங்களை வங்கிகள் உள்வாங்கிக்கொண்டுள்ளன. வங்கிகளின் விளம்பரங்கள் அதனைத் துல்லியமாக எடுத்துக்கூறுகின்றன. வாடிக்கையாளர்களின் தொகை அதிகரித்திருப்பதால் வங்கியில் கால் கடுக்க நிற்க வேண்டிய நிலை உள்ளது. பணத்தை வைப்பில் இட, பணத்தை மீளப்பெற, காசோலையை வைப்பில் இட என பல அறிவிப்புப் பலகைகள் உள்ளன. ஆனால், சில நேரங்களில்ஒரேயொரு கவுண்டரில்மட்டும் எல்லாவற்றையும் செய்ய வேண்டிய நிலை உள்ளது. பொதுவெளியில் இருப்பதால் பலரும் பார்க்கிறார்கள். இது பாதுகாப்பானதல்ல. முன்னர் தனி அறையில் இருந்த இயந்திரங்கள் இப்போது பொது வெளிக்கு வந்து விட்டன.

வங்கி அட்டை மூலம் பணப் பரிவர்த்தனை செய்யும் பலருக்கு அதனை எப்படிக் கையாள்வதெனத் தெரியாது. அங்கிருக்கும் இன்னொருவர் அல்லது பாதுகாப்பு ஊழியர் உதவி செய்வார் இதுவும் பதுகாப்பானதல்ல.

தலைக்கவசம், தொப்பி அணிந்து கொண்டு வங்கிக்குச் செல்லக்கூடாது. பலரும் ஹெல்மெட்டுடன் வங்கிக்குள் நடமாடுகிறார்கள். பாதுகாப்பு ஊழியர்கள் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மின் கட்டணம் செலுத்தச்சென்றால் வெளியில் மிசினில் போடும்படி சொல்கிறார்கள். இயந்திரத்தில் இருந்து வெளிவரும் சிட்டையில் பதிவுகள் காலப் போக்கில் அழிந்து விடக்கூடியவை. மின் சிட்டையில் பணம் செலுத்திய விபரம் இருப்பது தான் பாதுகாப்பானது. சில வங்கி முகாமையாளர்கள் இதனை உணர்கிறார்கள் இல்லை. சில வங்கிகளில் செலுத்தப்படும் மின்கட்டணம் உடனடியாகப் பதியப்படுவதில்லை. ■

பணம் வைப்பில் இடுவதற்கு இரண்டுக்கு மேற்பட்ட இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. பணத்தை மீளப்பெறுவதற்கு ஒரேயொரு இயந்திரம் மட்டும்தான் உள்ளது. அதனால் அங்கு நீண்ட வரிசை தென்படுகிறது.

நெல்லியடியில் உள்ள ஒரு வங்கியில் பணம் மீளப்பெறுவதற்கு இரண்டு இயந்திரங்களும் பணத்தை வைப்பிலிட ஒரு இயந்திரமும் இருந்தன. அங்கு இப்போது பணத்தை வைப்பிலிட ஒரு இயந்திரமும் மீளப்பெற ஒரு இயந்திரமும் உள்ளன. இதனால் பணத்தை மீளப்பெறும் வரிசை நீளமாக உள்ளது. பணத்தை மீளப்பெறும் இயந்திரத்திலும் பணத்தை மீளப்பெறலாம். அதற்கு அங்குள்ள பாதுகாப்பு ஊழியர்கள் தடையாக உள்ளனர்.

சில வங்கிகளில் பணத்தை வைப்பில் இடும் சிட்டைகளை மறைத்து விடுகிறார்கள். வெளியில் உள்ள இயந்திரத்தில் பணத்தை வைப்பில் இடுமாறு பாதுகாப்பு ஊழியர்கள் சொல்கிறார்கள். கசங்கிய பணத்தை இயந்திரம் ஏற்றுக் கொள்ளாததால் பலர் சிரமப்படுகிறார்கள். பணம் வைப்பில் இடுவதும் மீளப் பெறுவதும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிப்படுத்தும் கனவான் ஒப்பந்தம் வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையே உள்ளது. அந்த இயந்திரங்கள் தனி அறையில் இல்லாமல்

ச.குகநாதன்
வதிரி



# கமக்கார அமைப்பில் தனியாக அங்கத்துவக்குழு வேண்டும்

கமக்கார அமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் விவசாய செய்கையை விரிவாக்கவும் சீர் செய்யவுமே ஆகும். நீர் முகாமைத்துவம், விதை நடுகை பொருட்கள், பயிர்செய்கைக்கான பசளைகள் வழங்கல் மற்றும் விவசாயிகளிற்கு விவசாயம் செய்வதற்கான அறிவுரைகளை வழங்கல் என்பன கமக்கார அமைப்பால் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகள் ஆகும்.

ஆனால், கடந்த நாட்களில் பெய்த அடை மழை கமக்கார அமைப்பு தனது பணியை மேலும் சீர்செய்ய வேண்டும் எனவே மறைமுகமாக வலியுறுத்தியுள்ளது. காரணம் கடந்த தினங்களில் பெய்த அடைமழையால் விவசாயிகள் மிகப்பெரிய நட்டத்தை அடைந்துள்ளனர். ஏனெனில், விவசாயிகள் நெல் அறுவடை முடிந்ததும் நெல்லை காபெற் வீதிகளிலேதான் தமது நெல்லை உலர (காய) விடுகிறார்கள்.

அதிலும் ஏழை விவசாயிகள் தமது குடும்பத்தின் உதவியோடு மட்டும்தான் நெல் மணிகளை வீதிகளில் உலர விடுகிறார்கள். ஆனால், கடந்த நாட்களில் திடீரென்று ஒரு நாள் மாலை பொழுதில் பெய்யத் தொடங்கிய அடைமழை இரவும் தொடர்ந்தது. இதனால் வீதிகளில் உலர விடப்பட்ட நெல்மணிகள் நனைந்து அவிந்துவிட்டது அதோடு நெல் மணிகள், பெய்த அடைமழையால் அள்ளியும் செல்லப்பட்டுவிட்டது. நெடுங்கேணி, தண்டுவான் பிரதேச விவசாயிகள் இதனால் பெரும் நட்டத்தை அடைந்துள்ளனர்.

ஆனால், அவர்களிற்கு எவ்வித நட்டஈடும் வழங்கப்படவில்லை.

ஆனால், கமக்கார அமைப்பு சரியாகத் திட்டமிட்டிருந்தால் இவ் இழப்பை தடுத்திருக்க முடியும்.

எனவே, கட்டாயம் இனி, கமக்கார அமைப்பு அங்கத்துவக்குழு ஒன்றை உருவாக்க வேண்டும். விவசாயி நெல்லை அறுவடை செய்து உலர வைத்து வீட்டிற்கு கொண்டு வரும்வரை கமக்கார அமைப்புக்குழு அங்கத்தவர்கள் விவசாயிகளுக்கு தேவையான எல்லாவித உதவிகளையும் செய்ய வேண்டும். விவசாயி அதற்கு கைமாறாக தனது விளைச்சலால் வரும் இலாபத்தில் சிறுதொகையை கமக்கார அங்கத்துவக்குழுவிற்கு கொடுக்க வேண்டும். இப்படியாக எல்லாப் பிரதேசங்களிலும் ‘உதவி அரசாங்க அதிபர்’ மூலமாக “இச்சிந்தனை” செயல் திட்டத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். இச்சிந்தனை செயல் திட்டத்திற்கு வருமானால் விவசாயிகளினதும் கமக்கார அமைப்பினதும் முன்னேற்றத்திற்கு இச்சிந்தனை அடித்தளமாக அமையும்.

ஆகவே, இச்சிந்தனையை நடைமுறைப்படுத்த உதவி அரசாங்க அதிபர் “DS” தனது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். ■

வசந்தன் லக்சன்
மாமடு நெடுங்கேணி



# என்ன பிரச்சினை




உங்களைச் சுற்றி நடக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு தீம்புனல் தயாராக இருக்கிறது. உங்கள் பிரச்சினைகளை எழுதி தீம்புனல், கனகசபை கட்டடத் தொகுதி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி எனும் முகவரிக்கு அல்லது theempunal@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

மலர் 15

தொடர்கதை

# இரு மலர்கள்

யாழ் சத்யா



**ரா**க்கிங்கில் இருந்து தப்புவாளா கவி?

காலை ஆறு மணி. வழக்கம்போல அடித்த அலாரத்தை நிறுத்தி விட்டு திரும்பவும் போர்வையால் இழுத்து மூடிக்கொண்டு தன்னவளோடு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கம் அருகே இருந்த பெரிய மரத்தை சுற்றி டூயட் பாடிக் கொண்டிருந்தான் ஸாம் அபிஷேக்.

கவி நேற்றைய தினம் அணிந்திருந்த சுடிதாரோடு இருந்தாள். தேவதையாக தெரிந்தவளுக்காக இன்னும் எத்தனை வருடக் காத்திருப்போ என்று ஏங்கிப் பெருமூச்சு விட்டவனின் மோன நிலையை கைபேசியின் அழைப்பு குலைத்தது.

அலுப்பாய் எடுத்து "ஹலோ" சொன்னவனுக்கு அடுத்த பக்கமிருந்து நிரோஜனின் குரல் காதைத் துளைத்தது.

"என்னடா இன்னும் எழும்பேலையா? ஏழு மணி பஸ் எடுக்கிறியா? ஏழேகால் பஸ்ஸா?"

"ஏன்டா பின்னேரம்தானே லெக்சர்ஸ் இருக்கு. மத்தியானம் போல போவம்டா." தூக்க கலக்கத்தோடயே அலுப்பாய் பதிலுறுத்தான் ஸாம்.

"உனக்கென்ன விசரே லூஸன் மாதிரிக் கதைக்கிறாய் கவியை யாரும் ராக் பண்ணினால் இங்க படுத்துக் கிடந்து என்ன செய்யப் போறாய்? நல்லாத்தான் இருக்கு உன்ர ஆளில இருக்கிற அக்கறை"

"ஐயோ... ஓமடா... அதை நான் யோசிக்கவே இல்லை. ஏழு மணி பஸ்ஸிலயே போவம். மற்றவங்களிட்ட நீயே சொல்லு"

தொலைபேசியை வைத்ததுதான் தாமதம். குதித்தெழுந்து குளியலறைக்குச் சென்று தயாராகினான் ஸாம். அடித்துப் பிடித்து ஓடிச் சென்று ஏழுமணி பேருந்தைப் பிடித்து விட்டவன் உள்ளே ஏற மற்ற மூன்று நண்பர்களும் அமர்ந்திருந்தனர். நிரோஜனுக்கு பக்கத்தில் காலியாக இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவர்களுக்கு பின்னிருக்கையில் சுதர்சனும் சுதனும் இருந்தார்கள்.

நண்பர்கள் நால்வரும் அரசியல், சினிமா என்று அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். வல்வெட்டித் துறையில் அந்த பேருந்து நிலையத்தில் மக்களை ஏற்றுவதற்காக பேருந்து தரித்த போது ஸாமின் உள்ளுணர்வு ஏதோ உணர்த்த, பின்னுக்குத் திரும்பி சுதனுடன் கதைத்துக் கொண்டிருந்தவன் வாயிலைப் பார்த்தவன் இனிய அதிர்ச்சியில் அப்படியே உறைந்து விட்டான்.

மெல்லிய ரோஜா நிறத்தில் பெரிய பெரிய வெள்ளைப் பூக்கள் போட்ட பருத்தி சுடிதாரில் ஒரு ரோஜாப்பூக் குவியலே நடந்து வருவது போல வந்து கொண்டிருந்தாள் அவன் கனவுகளின் நாயகி.

பேருந்தில் ஏறியதும் உள்ளே ரெண்டடி எடுத்து வைத்து எங்காவது இருப்பதற்கு இருக்கை இருக்கிறதா? என்று விழிகளாளேயே துழாவியவளின் பார்வை இறுதி இருக்கைக்கு முன்னால் இருந்த ஸாமைக் கண்டு இனிதே அதிர்ந்து பின் ஒரு மலர்ந்த புன்னகையை முகத்தில் பூசியது.

"கவிதையே தெரியுமா? என் கனவு நீதானடி
இதயமே தெரியுமா? உனக்காகவே நானடி
இமை மூட மறுக்கின்றதே ஆவலே
இதழ் சொல்லத் துடிக்கின்றதே காதலே"

பேருந்திலே பாடலும் பொருத்தமாக ஒலிக்க இவள் மெதுவாக அவர்களை நோக்கி நகர்ந்தாள்.

"டேய் மச்சி... சிற்றுவேசன் சோங் செமை... முடிஞ்ச வரைக்கும் அவள கரெக்ட் பண்ணுற வழியப் பாரு" என்று ஸாமின் காதில் கிசுகிசுத்து விட்டு,

"கவி... நீ இங்க வந்து இரு... அஞ்சலி வரேலயா...?"

"பரவாயில்லை அண்ணா... நான் நிக்கிறன். அஞ்சுக்கு காய்ச்சல் அண்ணா. ரெண்டு மூணு நாளைக்கு வர மாட்டாள்."

"உனக்கென்ன விசரே... ஒரு மணித்தியாலமா நிண்டு கொண்டு வரப்போறியே" என்று கவியைக் கடிந்து கொண்டே தான் எழுந்து கொண்டு ஸாமின் பக்கத்திலே அவளை அமருமாறு பணித்தான் நிரோஜன். அதிகமாக வார்த்தையாடி மற்றவர்கள் கவனத்தைக் கவர விரும்பாமல் அவளும் அமர்ந்து கொண்டாள்.

ஸாமிற்கு சிறிது நேரம் தான் காண்பது கனவா? நனவா? என்பதே புரியவில்லை. கவின்யா அவன் அருகே... தோளும் தோளும் உரச ஒரு பஞ்சுப் பொதி ஒன்று தன்னை அணைத்திருப்பதைப் போன்ற ஆனந்தத்துடன் இருந்தான் ஸாம்.

அவளோடு பேசுவதா? வேண்டாமா? பேசுவதென்றால் என்ன பேசுவது? காதலைச் சொல்லி விடுவோமா? வேண்டாமா? பலதையும் எண்ணிக் குழம்பிய மனதிற்கு பதில் சொல்லத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இவளுக்கும் அதே உணர்ச்சிகள். தன்னவன் தந்த அருகாமை இனம் புரியாத ஓர் படபடப்பைத் தர என்ன பேசுவது என்று புரியாமல் மனதிற்குள்ளேயே அவனோடு பேசிக் கொண்டிருந்தாள்.

பேருந்து ஓட்டுநர் அடித்த திடீர் பிறேக்கில் முன்னிருக்கை கைப்பிடி கம்பியோடு தலையை மோத சென்றவளை தனது கையை அணையாகக் கொடுத்து கவியின் நெற்றி காயப்படாது காப்பாற்றினான் ஸாம்.

கண்களாலேயே நன்றி தெரிவித்தவள் அவன் பேசாது தான் எப்படி பேசுவது என்ற குழப்பத்தில் கட்டுக்கடங்காது துடித்துக் கொண்டிருந்த மனதை அடக்கும் வழியை தேடிக் கொண்டிருந்தாள்.

இருவரும் என்ன பேசுவது என்ற குழப்பத்திலேயே ஆழ்ந்திருக்க மணித்துளிகள் கடந்து பல்கலைக் கழகத்தையும் சென்றடைந்தனர்.

ராக்கிங் பயம் மனதை வாட்ட அஞ்சலியும் இல்லாமல் தனியே போவது மனதைப் பிசைய ஸாம் தன்னைக் காப்பாற்றுவான் என்ற துணிவே துணையாக ஸாம் பின் தொடர தனது பீடத்தை நோக்கி சென்றாள். வழியிலேயே மறித்த மருத்துவ பீட இரண்டாம் ஆண்டு மாணவர்கள்,

"என்ன மெடம்... நேற்று உங்களை காணேல்ல... எங்க போயிருந்திங்க?" "அது வந்து..."

"அதுதான் வந்தாச்சே..." "மனேஜ்மன்ற் பக்கல்ட்டி ராக்கிங் பண்ணினவங்க... அவங்க விடவும் ஓரியென்டேசனுக்கு டைம் ஆகிட்டு... நேரா அங்க போய்ட்டம்... சொறி அண்ணா..." எழும்பாத குரலில் மெதுவாக உரைத்தாள்.

"மச்சான். .. இவதான்டா டிஸ்றிக் ஃபெஸ்ட்... பெரிய இடம்... மாமா வேற இங்க லெக்சரராம்... ரொம்ப வதைக்காத... அவளும் சோளி, சுரட்டில்லாத நல்ல பிள்ளை தான்டா..."

கவின்யாவைப் பற்றி நன்கு அறிந்திருந்த ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவன் சாவகச்சேரியைச் சேர்ந்த தனது நண்பனுக்கு காதிலே மெதுவாக உரைத்தான்.

பகிடிவதை சட்டப்படி குற்றமாக அறிவித்து தடை செய்யப்பட்டு இருந்ததால் அவனும் நண்பனின் கூற்றை ஏற்று, "இது என்ன சுடிதாரோடு வந்திருக்கிறாய்? வெல்கம் பார்ட்டி வரைக்கும் கம்பஸ்க்கு வாற ட்ரெஸ் கோட் தெரியாதா?"

அவனின் குரலின் கடுமையில் கலங்கிய கண்களை கீழே குனிந்து மறைத்தபடி, "எனக்குத் தெரியாது அண்ணா... நாளையில இருந்து அப்பிடி வாறன்"

"சரி... சரி... அழாதை... கால் முட்ட கறுத்த நீளப் பாவாடையும் கைமுட்ட சீத்தைத் துணி ப்ளவுஸ்ஸூம் போட்டு வரோணும். தலை ரெட்டைப் பின்னல் போட்டு கறுப்பு ரிபன் கட்டி வரோணும். சரியா? இப்ப தலையை மட்டும் ரெட்டைப் பின்னல் போட்டு இதால கட்டு..." என்று கூறி அருகிலிருந்த வாழை மரத்தில் நார் உரித்துக் கொடுத்தான்.

'இதோட விட்டாங்களேடா சாமி' என்று மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தனது ஒற்றை ஜடையை அவிழ்க்க ஆரம்பித்தவள் பார்வை, சிறிது தொலைவில் நின்று இங்கே நடப்பதையே பார்த்துக் கொண்டிருந்த ஸாமைக் கண்டு புன்னகையால் மலர்ந்தது.

அவன் தன்னை நினைத்து வருந்துவதை உணர்ந்தவள் தனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்றும் அவனைப் போகச் சொல்லியும் கைகளால் சைகை காட்டினாள். அவள் மலர்ந்த முகத்தைப் பார்த்து திருப்திப் பட்டவனாக 'சரி' என்று தலை அசைத்தவன் அவள் இரட்டைப் பின்னல் போடும் அழகையே ரசித்துக் கொண்டிருந்தான்.

இரண்டு ஜடைகளையும் பின்னி முடித்து கீழே வாழைநாரால் கட்டி விட்டு, "அண்ணா நான் போகட்டா? நேரம் ஆகிட்டு..." மெதுவாக விளித்தவளைப் பார்த்து அந்த மாணவர்கள் கும்பலே அசந்து விட்டது.

**மலரும்...**

அகஸ்தியன்



சிறுகதை

# தக தக தக... தங்கப் பானை

கேட்டை, மூட்டை, செவ்வாய் ஆகிய மூன்றின் கலவையான என் அருமை மனைவி கமலாவின் அருமைத் தம்பி தொச்சு ஒரு நிமிடம்... இந்த கே.மூ.செ அடைமொழி என் அருமை மனைவியைக் குறிக்காது அவளின் தம்பி தொச்சுவைக் குறிக்கும்! என் வீட்டுக்கு வந்த போது என் இடது கண், இடது தோள், இடது காது, இடது கை, இடது பக்கம் இருக்கும் இதயம் என எல்லாமே ஆயிரம் வாலா சரவெடியாய் படபடத்தன!

கமலாவை நான் கல்யாணம் பண்ணிக் கொண்டபோது, சீதனமாக நிறையக் கொடுத்தார்கள். அவற்றோடு இலவச இணைப்பாக தொச்சுவையும் சேர்த்துக் கொடுத்துவிட்டார்கள். அவன் பின்னாளில் அங்கச்சியைக் கல்யாணம் செய்துகொண்டு தனியாகப் போய்விட்டாலும் அவ்வப்போது வந்து தன் தொப்பை, கைப்பை இரண்டையும் நிரப்பிக் கொள்வான். தாய்ப்பாசமே உருவான என் மாமியாரும், சகோதர பாசத்தை உருக்கி வடிவமைக்கப்பட்ட என் மனைவி கமலாவும் தொச்சு வரவேற்பு கமிட்டி என்ற நிரந்தர அமைப்பை நிறுவி, அவனுக்கு ராஜோபசாரங்கள் செய்வது பற்றி விபரமாகக் கூறினால், அது அபசாரம் ஆகிவிடும்.

சரி, விடயத்துக்கு வருகிறேன். “தொச்சு, என்னப்பா சமாசாரம்?” என்று கேட்டேன்.

“தொச்சுவா? வா... வா!” என்று மதுரைமணியின் ‘கந்தா வா... வா’ பாணியில் கமலாவும் மாமியாரும் அவனை வரவேற்றார்கள்.

“அத்திம்பேர்... ஒரு பிரமாதமான ஐடியாவோட வந்திருக்கேன்!”

“ஓஹோ... ஐடியா ஓட, நீ மட்டும் தனியா வந்திருக்கியா?” என்றேன் குதர்க்கமாக.

“கொன்னுட்டீங்க அத்திம்பேர்! எப்படித் தான் சட் சட்னு இப்படிப் புகுந்து விளையாடறீங்களோ!”

‘பெரிதாக அஸ்திவாரம் போடுகிறான் சுதாரி!’ என்று உள்ளுணர்வு சொல்லியது. அதன் காரணமாக, வயிற்றில் புளி கரைத்தது. இப்படி புளி கரைக்கும் உணர்வு, பின்னால் என் பணம் கரையப்போகிறது என்பதற்கான அறிகுறி!

“வீட்டுக்கு வந்தவனை ‘வாடா, உட்காரு! ஒரு கப் காபி சாப்பிடுறியா?’ என்று கேட்க வேண்டாம்... இப்படி மட்டம் தட்டிப் பேசாமல் இருக்கலாம்” என்று நொடித்தாள் கமலா.

“காபிக்கு என்ன அவசரம் அத்திம்பேர்? உங்களுக்குத் ‘தங்கப் பானை’ தெரியும்தானே?”

“தங்கைப் பானை, அக்கா பானை... ஒரு எழவும் தெரியாது!” என்றேன்.

“சொல்லுடா... டி.வி. நிகழ்ச்சி ‘தங்கப் பானை’தானே, நம்ம ஜிகினாஸ்ரீ நடத்துற நிகழ்ச்சிதானேடா? இப்ப என்ன அதுக்கு?” என்றாள் கமலா.

“அதேதான்! அதுக்கு எழுதிப் போட்டேன். வருகிற வாரம் வரச்சொல்லி இருக்காங்க. அத்திம்பேர், நீ, அங்கச்சி மூணு பேரும் போயிட்டு வாங்க..!”

“நான் எதுக்கு? இதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்க போய் பரிசு, பணம் எல்லாம் ஜெயிச்சுண்டு வாங்க..!” என்றேன்.

“அப்படியே இவர்கிட்ட கொண்டு வந்து கொடுத்தால், அக்காவுக்குப் பொங்கல், தீபாவளி, மதர்ஸ் டே, சிஸ்டர்ஸ் டே, காபி டேன்னு பாத்துப் பாத்து அனுப்புவார். குழந்தை வேலை மெனக்கெட்டுப் பதிவு பண்ணிட்டு வந்து கூப்பிடுறானே... ஆயிரம் பிகு!”

“விடுக்கா..! அத்திம்பேர் வரலைன்னா டிஸ்டர்ப் பண்ணாதே! நீ, அங்கச்சி, நான் மூணு பேரும் போகலாம். நீதான் லீடர்!”

“சரிடா! பரிசு கிடைச்சா சந்தோஷம். இல்லாட்டாலும் டி.வியில நாம வந்ததே சந்தோஷம்ன்னு இருந்துட்டா போச்சு..!”

“ஆனா, ஒரே ஒரு பிரச்சினைக்கா!”

“என்னது?”

“டி.வி ஷோவுக்கு வர்ற ரெண்டு பெண்களும் ஒரே மாதிரி புடவை கட்டிண்டு வரணுமாம்...”

இதைத் தொடர்ந்து என்னென்ன வசனங்கள் வரும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, வருமுன் காப்போனாக, “அதுக்கென்ன... இரண்டு புடவை வாங்கிட்டா போச்சு!” என்றேன்.

கமலா முகத்தில் ஆயிரம் வாட் பிரகாசம்! தொச்சுவின் முகத்தில் பத்தாயிரம் வாட் பிரகாசம்! என் மாமியார் முகத்திலோ, அரசியல் கட்சியின் மாநாட்டுப் பந்தல் போல் ஒளி வெள்ளம்!

“வாங்கிறது வாங்கிறோம், பட்டுப் புடவையாவே வாங்கிடலாம்! டி.வி. ஷோவுக்கு எடுப்பா இருக்கும். சரி, தொச்சு... பரிசு கிடைத்தால், முதல் பரிசாக எவ்வளவு கிடைக்கும்?”

“டீமுக்கு ஒரு லட்சம்! நம்ம நிகழ்ச்சி 100 ஆவது நிகழ்ச்சியாம். அதனால பரிசு இன்னும் அதிகமாகக் கூட இருக்குங்கிறாங்க! சரி அக்கா, அங்கச்சியை எப்ப வரச்சொல்லட்டும்? புடவை வாங்கணுமே?” என்று கேட்டான் தொச்சு. சந்தடி சாக்கில் கந்தகப் பொடி மன்னன்!

“மத்தியானமே வரச் சொல லேண்டா..!”

புடவைக் கடையில் கமலாவும் அங்கச்சியும் ஒரே மாதிரி இரண்டு பட்டுப் புடவை வாங்குவதற்குள் படுத்திய பாட்டை விபரிக்கலாம் என்றால், மூன்று மெகா சீரியல்களை ஒரே சமயத்தில் பார்ப்பது போன்று அழுகை அழுகையாக வருகிறது. ஆகவே தவிர்க்கிறேன்.

அல்லி டி.வியில் ‘தங்கப் பானை’ நிகழ்ச்சி ஆரம்பம்.

ஒரு சைஸ் சின்ன அளவு ஜீன்ஸ், இரண்டு சைஸ் சின்ன அளவு பனியன் அணிந்து வந்த கல்லூரி மாணவி... சட், கல்லூரி மாணவி... காம்பியர் பண்ண வந்தாள்.

“அள்ளி டி.வி. ஏராளமான பரிசுகளை அல்லித் தருகிற தங்கப்பானை நிகழ்ச்சி. வரவேற்கிறோம், இந்த 100 ஆவது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள...” என்று தொடங்கி, போட்டியாளர்களை அறிமுகம் செய்யத் துவங்கினாள்.

என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. கமலாவும் அங்கச்சியும் உடன்பிறவாச் சகோதரிகள் மாதிரி மேக்கப்பில் ஜொலித்தார்கள்.

நிகழ்ச்சி தொடங்கியது. உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, துவரம் பருப்பு மூன்றையும் மூன்று தட்டுகளில் வைத்துப் பெயரைக் கேட்டாள் ஜிகினாஸ்ரீ. எதிரணி பாவம், ஃபாஸ்ட் ஃபுட்டின் அடிமைகள் போல! விழிவிழியென்று விழித்தார்கள். தொச்சு, சாப்பாட்டின் அடிமை. அவன் சட்டென்று சரியாகச் சொல்ல, அங்கச்சி கதவிடுக்கில் மாட்டிக் கொண்ட எலி மாதிரி கீச்சுக்குரலில் கத்திச் சிரித்தாள். ஒவ்வொரு ரவுண்டுக்கும் பாயின்ட்டுகள் ஏறிக் கொண்டே போய், இறுதியில், கமலா டீம் வெற்றி பெற்றதாக ஜிகினாஸ்ரீ அறிவிக்க, ஒரே ஆரவாரம்... கைத்தட்டல்!

என் மாமியாரை அவர் இஷ்டப்படி செய்யவிட்டிருந்தால் மாவிலைத் தோரணம், இலைக் கோலம், பந்தல், வாழை மரம், மேளதாளம், பூரண கும்பம் என விஸ்தாரமாக ஏற்பாடு செய்திருப்பாள், கமலா அண்ட் கோவை வரவேற்க!

வழக்கத்தைவிட அட்டகாசமான அலட்டலுடன் தொச்சு, “அத்திம்பேர்.. பாத்தீங்களா, எதிர் டீமை சுருட்டிட்டோம்” என்றான்.

‘சுருட்டறது உனக்குக் கைவந்த கலைதானேடா!’ என வாய் வரை வந்து விட்டது. “பார்த்தேன்... ஊதித் தள்ளிட்டீங்களே! சரி, பரிசு எப்போ கிடைக்குமாம்?” என்றேன்.

“அதில் ஒரு சின்னப் பிரச்சினை, அத்திம்பேர்! பரிசுத் தொகையை டெல்லியில்தான் கொடுப்பாங்களாம். நேரே போய் வாங்கிக்கணும்!”

“தொச்சுவுக்குப் பரிசு வாங்கின சந்தோஷத்தை விட டெல்லி போய் வரணுமே, செலவாகுமே என்று ஒரே கவலை” என்றாள் கமலா.

“சரி, சரி... எதுக்கு மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கிறே? டிக்கெட் நான் வாங்கிக் கொடுக்கிறேன்!”

“அதுக்கு ஏன் அலுத்துக்கறேள்? பரிசுப் பணத்தை நானா தலைமேல் வெச்சுக் கட்டிக்கப் போறேன்?” என்று முகத்தைச் சுழித்தாள் கமலா.

“அத்திம்பேர்... சௌக்கியமாக வந்து சேர்ந்திட்டோம். ஜன்பத் ஹோட்டல்லதான் ரூம் போட்டிருக்கோம். சௌகரியமா இருக்கு. ஷாப்பிங் போகும்போது உங்களுக்கும் ஏதாவது வாங்கிண்டு வர்றோம். என்ன வேணும்னு கேக்கச் சொல்றா அக்கா!”

“வேறென்ன வேணும்... கடன் தான் வேணும்!” என்றேன்.

தொச்சு ‘ஓ’வென்று சிரித்து, “அத்திம்பேர், நகைச்சுவைல உங்களை யாரும் அடிச்சுக்க முடியாது!” என்று ஒரு ஐஸ்ரூபெர்க்கையே என் தலை மேல் வைத்தான்.

அப்போது கமலா அவனிடமிருந்து போனை வாங்கி, “பாருங்கோ... விழாவில் ஒரே மாதிரி புடவை கட்டிண்டால் நல்லா இருக்கும்னு சொல்றா. அதனால எங்களுக்கு ஒரே மாதிரி ரெண்டு பனாரஸ் பட்டுப் புடவை வாங்கிக்கிறோம். என்ன, காதுல விழுந்ததா?” என்று கேட்டாள்.

நான்தான் விழுந்தேன் சோபாவில்!

கால்டாக்ஸி கொள்ளாமல் சாமான்களை (டெல்லி பர்ச்சேஸ்!) அடைத்துக்கொண்டு கமலா டீம் என் வீட்டு வாசலில் வந்து இறங்கியது.

“அத்திம்பேர், 500 ரூபாயாக இருக்கு. கால்டாக்ஸிக்குப் பணம் கொடுத்துடுங்கோ!” என்ற தொச்சு, சாமான்களை எல்லாம் இறக்கிக் கூடத்தில் பரப்பிவிட்டு, சோபாவில் சரிந்து ‘உஸ்’ஸென்று பெருமூச்சு விட்டான்.

“தொச்சு... பரிசாகக் கொடுத்த செக் எங்கே? காட்டு, பார்க்கலாம்!” என்றேன்.

“விழாவில் வெற்றுக் கவர்தான் கொடுத்தாங்க. அப்புறம், ஒரு லட்சம் ‘கேஷ்’ கொடுத்தாங்க!”

“சரி, அதைத்தான் காட்டேன்!”

“அடடா..! ஒரு மனுஷன் இப்படியா பணத்துக்கு றெக்கை கட்டிண்டு பறப்பான்? போன இடத்தில் நாலு சாமான் வாங்கி இருப்பாங்களே, அதுக்குப் பணம் தேவைப்பட்டிருக்காதான்னு யோசிக்க வேணாமா? பாருங்கோ, எவ்வளவு சாமான் வாங்கிண்டு வந்திருக்கோம். அக்காவும் அங்கச்சியும் கோல்டன் ஜுவல்லரிக்குள் போகும் போதே எனக்கு ‘பக்’குனு இருந்தது. கடையா அது?! மூணு ஜோடி வளையலே 60,000 ஆயிடுத்து!”

“மூணாவது ஜோடி யாருக்கு?”

“உங்க அக்காவுக்கு! கேள்வியைப் பாரு..! என் அம்மான்னு ஒருத்தி இருக்கிறது எப்படித் தெரியும் உங்க கண்ணுக்கு?”

“அப்புறம் அத்திம்பேர்.... டாக்ஸி, ஹோட்டல் பில், பனாரஸ் பட்டுப் புடவை, டிஜிட்டல் கேமரா அது இதுன்னு...”

“பூராத்தையும் காலி பண்ணியாச்சா?”

“பூரா இல்லை அத்திம்பேர்! கால் டாக்ஸிக்காக 500 ரூபாய் மிச்சப்படுத்திண்டு வந்தேனே!”

“அடடா! உன் சாமர்த்தியமே, சாமர்த்தியம் தொச்சு!”

“அப்புறம் ஒரு சின்ன விடயம், அத்திம்பேர்! அல்லி டி.வி. சார்பா ஒரு முதியோர் இல்லம் அட்ரஸ் கொடுத்து, அதுக்கு 10,000 ரூபா டொனேஷன் அனுப்பும்படி சொல்லி இருக்காங்க. மறக்காம அனுப்பிடுங்கோ! நம்மளை மதிச்சு இவ்வளவு தூரம் கூப்பிட்டுப் பரிசு கொடுத்தவங்க சொன்னபடி செய்யிறதுதான் நமக்கு மரியாதை! அப்போ, நானும் அங்கச்சியும் கிளம்பறோம்” என்று அவர்களுக்கான சாமான்களை பேக் செய்துகொண்டு புறப்பட்டார்கள்.

பானை பிடித்தவள் பாக்கியசாலி தான்! ஆனால், பானை பிடித்தவளைப் பிடித்தவன்? வேணாம், சொல்ல மாட்டேன். எதுக்கு வம்பு?

**முற்றும்**

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

# குறள் இன்பம் 27



**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத் தொடர்.**

**உடலில் துன்பம், உள்ளத்தில் இன்பம்!**

பசப்பு உறு பருவரல் என்ற அதிகாரத்தில், இன்பமான காதல் வாழ்வில் இணைந்திருக்கும் தம்பதிகள், தமது ஒன்றுபட்ட இசைவின் அடிப்படையில், தற்காலிகமாகப் பிரிந்திருக்கும்போது, அதனால் ஏற்பட்ட தனிமையின் கொடுமையைத் தாங்கொணாத பெண்ணின் உள்ளக்கிடக்கையையே வள்ளுவப் பெருந்தகை நமக்கு படம்பிடித்துக் காட்டுவதைப்போலச் சொல்லியிருக்கிறார். இதனை இன்பமான துன்பம் என்று சொல்வதா, துன்பமான இன்பம் என்று கொள்வதா என்பதெல்லாம் அவரவர் உள்ளத்தின் நெகிழ்வைப் பொறுத்தது.

அன்பிற்குரிய கணவருடன் மண முறிவோ அல்லது காதலருடன் மன முறிவோ ஏற்படாதவரை எந்தப் பெண்ணும் அவரால் எத்தகைய துன்பம் நேரிட்டாலும் அதனைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள மாட்டாள். ஆனால், தான் அவரால் அடைந்த இன்பத்தை, மகிழ்ச்சியை பிறர் அறிவதில் அக்கறை செலுத்துவாள். அதில் இறும்பூதடைவாள். அது இயற்கையானது.

அதனால்தான், அவர் பிரிந்திருப்பதற்குத் தானே அனுமதி கொடுத்துவிட்டு, பிரிவுத் துயரைப்பற்றி எப்படி மற்றவர்களிடம் சொல்லி அழ முடியும் என்றும் தனக்கு வந்த காதல் நோய் அவர்தந்தது என்பதால், அது பெருமை மிக்கது என்றும் தனது நோய்பற்றி மற்றவர்களுக்குத் தெரிய வந்தால் அவர் தன்னோடு இணக்கமாக இருக்கிறார் என்றுதானே மற்றவர்கள் நினைப்பார்கள் என்பதால் அது தனக்கு மகிழ்ச்சியானதுதானே என்றும் எண்ணியெண்ணி, தன் உடலில் தோன்றிய பசலையால் மங்கிவரும் நிறத்தைக்கூட உள்ளத்தில் பொங்கிவரும் இன்பத்தால் வருகின்ற அடையாளமாகக் கொண்டு புளகாங்கிதம் அடைகிறாள். அத்தகைய ஒரு பெண்ணின் வாக்குமூலமாக வள்ளுவப் பெருந்தகை வடித்துத் தந்த குறள்களில் மூன்றை இதுவரை படித்து அனுபவித்து மகிழ்ந்தோம். அடுத்த குறள் சொல்வதையும் பார்ப்போம்.

**அவர்நினைவில் என் மனம்! பசலை எப்படி வரும்?**

**“உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்**
**கள்ளம் பிறவோ பசப்பு” (1184)**

“என்மனதில் அவரையே நினைத்துக்கொண்டிருக்கிறேன். எனது வாயால் அவரது நற்குணங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறேன். இப்படியிருக்கும்போது இந்தப் பசப்பு நோய் வஞ்சனையாகவோ அல்லது வேறு வழியினாலோ எனக்கு வந்திருக்கிறதே! எப்படி?” என்று எந்நேரமும் தனது காதலுக்கு உரியவனையே நினைத்துக் கொண்டிருக்கும் ஒருபெண் தன் தோழியிடம் அப்பாவித்தனமாகக் கேட்பதையே இந்தக் குறள் வெளிப்படுத்துகிறது.

இந்தக் குறள் காதல் வாழ்வின் முக்கியமான சிறப்பு ஒன்றை நமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அது என்னவெனில் காதலர் உடலால் பிரிந்திருப்பதால் வருவது காம நோய். அதன் அறிகுறியே உடலில் ஏற்படும் நிறமாற்றம் என்னும் பசலை நோய். இது எப்போது வரவேண்டும்? காதலனை உள்ளத்தால் பிரிந்திருக்கும்போது அல்லது உடலால் நீண்டகாலம் பிரிந்திருக்க நேரும்போது. இந்த நிலைமை யாருக்கு வரும் என்றால், காதல் மணத்தைக் கடந்து கற்புமணத்தில் நுழைந்து ஈருடல் ஒருயிராக வாழ்ந்தவர்கள் பிரியும்போதே ஏற்படும், ஏற்பட வேண்டும்.

காதலில் மட்டும் ஈடுபட்டிருக்கும் காலத்தில், அதாவது களவுமணத்தில் இருக்கும் நாட்களில் அவர்கள், உள்ளத்தால் மட்டும் இணைந்திருப்பார்கள். அப்போது அவர்களிடையே ஏற்படும் பிரிவு மிகவும் குறுகியதாக இருக்கும். சில மணி நேரங்களாகவோ, ஒருநாள் இருநாட்கள் என்ற அளவிலோ அல்லது சில நாட்களாகவோ இருக்கும். அதற்குள் எந்த நேரமும் அவர் வந்துவிடுவார் என்று அவள் காத்திருப்பாள். அதுவரை அவள் அவனையும் அவனது இனிமையான வார்த்தைகளையும் அவனது நற்குணங்களையும் பற்றி நினைத்து, நினைத்து மகிழ்ந்து கொண்டிருப்பாள். அதுவரையான பிரிவு அவளை வேதனைப்படுத்துவதில்லை. அதனால் உடல் வருத்தம் ஏற்படுவதும் இல்லை. ஆனால், கற்பு மணத்தில் ஈடுபட்டதன் பின்னர், அதாவது கணவன் மனைவியாக வாழத் தொடங்கிய பின்னர் வேறு ஊருக்கு அல்லது வேறு நாட்டுக்கு அவனது கடமை நிமிர்த்தமாக அல்லது பொருள்தேடும் தொழில் நிமிர்த்தமாகப் பிரிந்து செல்லும்போது அது நீண்டகாலப் பிரிவாக இருக்கும். திரும்பிவரும் நாள் நிச்சயமில்லாததாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், திரும்பியே வரமுடியாத அபாயம் நிறைந்ததாகவும் இருக்கலாம். உதாரணமாகப் போருக்குச் சென்ற படைவீரனைச் சொல்லலாம். இந்த நிலையில் எப்போது வருவாரோ என்ற நிச்சயமற்ற தன்மை உள்ளத்தையும் கணவன் மனைவியாக வாழ்ந்த இல்லற இன்பம் இல்லாதிருப்பதால் உடலையும் அத்தகைய பிரிவு கடுமையாக வாட்டும். அதன் காரணமாகப் பசலை நோய் தாக்கும்.

எனவேதான், காதலனோடு களித்திருந்த நினைவுகளில் ஈடுபட்டிருந்தால் மட்டும் திருமணம் செய்துவாழ்ந்த கணவனின் பிரிவின் துயர் நீங்கிவிடாது என்பதையும் அது இல்லறத்தில் இன்னும் ஈடுபடாத காதலிக்கு மட்டுமே பொருந்தும் என்பதையும் விளக்கும் விதமாக இந்தக் குறட்பா உள்ளது.

**அதோ அவர் போகிறார்! இதோ உடல் வேகிறது!**

ஒரு கணம்கூட அவரைப் பிரிந்து இருப்பதை அவளது மனதாலும் உடலாலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்பதை ஆதாரத்துடன் ஒருத்தி தன் தோழிக்கு எடுத்துச் சொல்வதுபோல அடுத்த குறளின் கருத்து இருக்கிறது.

அவன் வெளியூர் செல்வதற்கு அவளும் எப்படியோ சம்மதம் கொடுத்துவிட்டாள். பிரிந்து செல்லும் நேரத்தில் அவளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவன் செல்கிறான். சற்றுநேரத்தில் அவளுக்குத் துணையாக அங்கே அவளின் தோழி வருகிறாள்.

அவளைக் கண்டவுடன், கலங்கிய கண்களைத் துடைத்தவாறே, அவளிடம் சொல்கிறாள். அவர் இப்போதுதான் இங்கிருந்து போனார். நீ வேண்டுமானால் சிறிது தூரம் நடந்து போய்ப் பார், அவர் சென்றுகொண்டிருப்பதை நீ காண்பாய். ஆனால், அதற்கிடையில் என் உடலை காதல் நோய் தீண்டத் தொடங்கிவிட்டது. அதன் பாதிப்பு ஆரம்பமாகிவிட்டது. இங்கே பார், என் கழுத்தைப் பார், என் கைகளைப்பார் எங்கும் பசலை படர்வதைப் பார். கொஞ்சநேரமும் அவரை என்னால் பிரிந்திருக்கவே முடியாதபடி எனது உடலும் தவிக்கிறது. அதனால்தான் அவர் அங்கே செல்ல, பசலை இங்கே படர்கிறது என்று சொல்லிக் கலங்குகிறாள்.

அதில் ஒருவகைப் பரவசமும் அவளின் இதயத்தில் படருவதை அவள் உணர்கிறாள். அதில் உள்ளூரப் பெருமையும் அடைகிறாள். அந்தப் பெருமையைத் தன் தோழியிடம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறாள் என்பதுதான் இந்தக் குறள் வெளிப்படுத்தும் காட்சியாகும்.

இந்தக் குறளில் உள்ள இன்னும் ஒரு சிறப்பு. தன் காதலர் செல்வதைப் பற்றித் தோழியிடம் சொல்லும்போது, “எம் காதலர்” என்று குறிப்பிடுகிறாள். தன் நோயைப் பற்றிச் சொல்லும்போது, “என்மேனி” என்று குறிப்பிடுகிறாள். அவனும் அவளும் இன்பமாக வாழ்வதை அறிந்தவள்தான் அந்தத் தோழி என்பதையும் ஏற்கெனவே அந்தத் தோழிக்கும் அறிமுகமானவந்தான் அவளின் காதலன் என்பதையும் புலப்படுத்துவதே “எம் காதலர்” என்ற அந்த வார்த்தைப் பிரயோகத்தின் கருத்தாகும்.

அந்த அழகிய தமிழ் இரண்டாயிரம் வருடங்கள் கடந்து இன்னமும் நம்மிடையே இன்றைய மொழிவழக்கில் வழங்கி வருவதை நாம் அறியும்போது தமிழின் பெருமை நம்மை இன்புறவைக்கிறது.

ஆம்! இப்போதெல்லாம் இளைஞர்கள் ஆண்களும் சரி, பெண்களும் சரி, தமது காதலியை அல்லது காதலனை தம் நண்பர்களுக்கு, “அது நம்ம ஆள்” என்று பன்மையில் சொல்லிச் சுட்டிக் காட்டுவதும் குறிப்பிடுவதும் சாதாரண வழக்கம் அல்லவா?

**“உவக்காண்எம் காதலர் செல்வார்**
**இவக்காண் என்**
**மேனி பசப்பூர் வது” (1185)**

“அந்தப் பக்கம் போய்ப் பார், என்னைப் பிரிந்த என்காதலர் இப்போது சென்றுகொண்டிருப்பார். இங்கேபார், அதற்கிடையில் எனது உடலில் பசலை நிறம் படர்ந்துகொண்டிருப்பதை” என்பது இந்தக் குறளின் கருத்து.

**(தொடரும்)**

# உனக்காக மட்டும்



நெஞ்சில் உண்டு
உன்னில் பாசம்
இதயம் துடிக்கும்
உனக்காக மட்டும்

காற்றுகூட உன்
கதை வந்து சொல்லும்
நாளை விடிவதும்
உனக்காக இருக்கும்

பூக்கள் கூட மலரும்
சுகந்தம் வீசி மகிழும்
தேனீ வந்து தேன்
பருக மறுக்கும் பாராயோ?

அன்பே உனக்காக
இந்த உலகை நான்
மாற்றி வந்து நிற்பேன்
ஒரு நொடி மாறாயோ?

இதழ் விரித்து நீ
எனைப் பார்த்து சிரி

இந்த ஒன்று போதும்
உள்ளம் மகிழ்ந்திட

நெஞ்சம் குளிரும்
குருதி நிறைந்து
இதயம்கூட சத்தம்
கொண்டு துடிக்கும்.

✍ நதுநசி

# எனது ஊர்

ஓங்கி உயர்ந்த பனைகள்
பல உண்டு

தெளிந்த தென்னைமரங்கள்
நிறைய உண்டு

சொல்ல காடுகள்

கடந்த காலம் சொல்லும்
கல் வீடுகள்

அனுபவத்தால் முதிர்ந்த

✍ லக்சன்



வாசம் வானை முட்டும் கூழைப்
பலாவும் உண்டு

எம் ஊர் நீரோடைகளிலும்
உண்டு தனிச்சிறப்பு

வெண்தாமரை பூத்த குளம்
மாமடு குளம்

நெற்கதிர் பாரம் தாங்காத
நெல் வயல்கள் உள்ள இடம்

அகன்ற ஆலமர நடுவில் உயர்
பனைகள் உள்ள ஊர்

கனத்தாலும் காலத்தாலும்
கடந்து கதை

முதியவர்கள் முகம்
காட்டும் ஊர்

உழவு தொழிலை உறங்க
விடா உழவர்கள் உள்ள ஊர்

செயற்கைகள் இல்லா
செழிப்பான ஊர்

சனம் குறைந்த ஆனால் மனம்
நிறைந்த ஊர்

இவ் ஊரில் உள்ள கவிஞன்
அல்ல நான்

இவ் ஊரில் உள்ளதால்தான்
நான் கவிஞன்

# வேறொரு வாழ்வு

✍ த.செல்வா



நான் என் மகனுக்கு
இருண்ட காலத்தின்
பாடல்களை பாடிக்காட்டி
விடியலின் மேடையிலே ஆடுவது
பற்றி சொல்லிக் கொடுப்பேன்

என் மகன் என்னைப் போல்
துரோகிகளிடம் அகப்படாமல்
காத்திருப்பில் மூழ்காமல்
அன்புநதியால் அடித்துச்
செல்லாமல்
ஏமாற்றங்களை
ஏணியாக்காமல்
புரட்சி செய்ய சொல்லிக்
கொடுப்பேன்

புகழ் போதையில் சிக்காமலும்
புழிச் சொற்களால் பயப்படாமலும்
வாழும் தைரிய விதிகளை
கவிதையாக்கிக் காட்டுவேன்

தேயும் பிறை முழுமதியாகும்
ஓடும் நதி கடலை அடையும்
என்பதை
முணுமுணுத்துக் காட்டுவேன்

சிரிக்கும் போது
அழுகையினையும்

அழும் போது சிரிப்பினையும்
நேசியென
இடித்துரைப்பேன்

ஏனெனில்
என் மகன் நான் வாழாத

வேறொரு வாழ்வை வாழ
வேண்டுமென்பதற்காய்

ஏனெனில் என் மகன்
நான் பார்த்த
மனிதர்களைக் காணக்
கூடாதென

# இரவின் மடியில்!

இரவின் மடியில்
இருக்கும் பொழுது
இதமாய் பதமாய்
இளமை இறங்கும்

சுகமாய் காதல்
உணர்வால் நானும்
உறக்கம் தொலைத்தே
வானில் பறப்பேன்

மெல்லிய தென்றல்
காற்றில் மலர்கள்
சற்றே நெளிந்து
வளைந்தே ஆடவும்



கள்ளிடை ஊறிய
கொவ்வைப் பழமாய்
வெண்ணிலா பார்த்து
கவிஞனும் மயங்க

இரவென்ற ஒன்று
தருகின்ற அழகு
இயற்கை தனது
உருவத்தை நிஜமாய்

ரசிக்கின்ற விதமாய்
கொடுக்கின்ற பொழுது

பார்க்கின்ற மனிதர்
குழந்தை ஆவதும்

கவிபல பாடி
கவிஞர் ஆவதும்
களித்தே அதனை
கேட்பவர் மகிழ்வதும்

அடடா ஆனந்தம்
அற்புதம் பரவசம்
அதைவிட வேறென்ன
பேரின்பம் இங்கு?

✍ வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

# பெண்களுக்கான ஆரோக்கிய உணவு

உணவு தொடர்பான உரையாடலில் நாம் பேச வேண்டிய இன்னொரு முக்கிய விடயம், பெண்களின் ஆரோக்கியத்திற்கு பொருத்தமான உணவுகள். ஆண்களைவிட பெண்கள் 10-20 கிலோ குறைவாக இருப்பதால், பெண்கள் சிறிய சைஸ் ஆண்கள் இல்லை. ஆண்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகள் எல்லாமே பெண்களுக்குப் பொருந்தாது. காரணம் மாதவிடாய், கர்ப்பம் என ஒவ்வொரு தருணத்திலும் பெண்களின் உடல் பல்வேறு மாற்றங்களை அடைகிறது. இது ஆண்களுக்கு இல்லை. எனவே, பெண்களின் உடல் சத்துக்களின் தேவை ஆண்களிலிருந்து பல வகைகளில் மாறுபடுகிறது. அதனால் பெண்கள் தங்கள் ஊட்டச்சத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1970-1980களில் ஊட்டச்சத்துக் குறைபாடு என்பதே பெண்களுக்கு இருந்த பிரதான பிரச்சினை. ஒல்லியாக இருப்பார்கள்... அதேநேரம் இரும்புச் சத்துக் குறைபாடு, இரத்தசோகை பிரச்சினைகளும் இருக்கும். அதனால் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் எடை குறைவாக இருந்தன. பிறந்த குழந்தைகளுக்கு எந்தெந்தக் காலகட்டத்தில் என்னென்ன சத்துக்களைக் கொடுக்கவேண்டும் என்று அரசும் திட்டங்களை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தியது. ஆனால், பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. பிறகுதான், குழந்தைகளின் ஆரோக்கியம் பிறப்பதற்கு முன்பாகவே தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது என்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்தது. தாய்மார்களின் ஆரோக்கியமே குழந்தைகளின் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கிறது எனத் தெரியவந்த பிறகு, அவர்களின் உடல்நிலை மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஆனால், தற்போதைய நிலவரம் மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.

பெண்கள் கீரை சாப்பிடும் அளவு மிகவும் குறைந்துவிட்டது. அதேநேரம் இரத்த சோகையால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து விட்டதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. 10 சதவிகிதப் பெண்கள்தான் போதிய அளவுக்குக் காய்கறி, கீரை சாப்பிடுகிறார்கள்.

2016, 2021 ஆகிய ஆண்டுகளை ஒப்பிடுகையில் ஒல்லியாக இருக்கும் பெண்களின் சதவிகிதத்தில் பெரிய அளவிலான மாற்றம் ஏதுமில்லை. ஆனால், 53 சதவிகிதப் பெண்கள் இரத்தசோகையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், இரத்தசோகையால் பாதிக்கப்படும் கர்ப்பிணிகளின் சதவிகிதம் 44 இல் இருந்து 48 ஆக அதிகரித்திருக்கிறது. இந்த எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. மறுபுறம், உடல் பருமனாக இருக்கும் பெண்கள் இந்த இடைப்பட்ட ஆண்டுகளில் 30 சதவிகிதத்தில் இருந்து 40 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறார்கள்.

ஆரோக்கியமில்லாத, சத்துக்களில் சமநிலை இல்லாத குப்பை உணவுகளையே பெண்கள் தற்போது அதிக அளவில் உட்கொள்கிறார்கள் என்பதையே இத்தரவுகள் உணர்த்துகின்றன. கிடைக்க வேண்டிய முக்கிய சத்துக்களின் விகிதம் குறைந்துகொண்டே இருக்கிறது. ஒருபக்கம், உடல் பருமனாகிக்கொண்டே செல்கிறவர்கள், ஊட்டச்சத்தில் குறைபாடு உள்ளவர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மோசமான நிலை. குழந்தைப்பேற்றில் பிரச்சினை ஏற்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது.

மேலும் PCOD எனப்படும் கருப்பை நீர்க்கட்டி பிரச்சினையும் வெகுவாக அதிகரித்திருக்கிறது. குழந்தைப்பேற்றில் பிரச்சினை இருக்கும் 50 சதவிகிதத்திற்கும் மேலான பெண்களுக்கு, PCOD தான் முதன்மைக் காரணமாக இருக்கிறது. சரியான உணவுமுறை மூலமாக இதற்குத் தீர்வு காண்பது எப்படி என்பது தெரியாமல் நிறையப் பேர் கருத்தரிப்பு மையங்களை நம்பி நிறைய இலட்சங்களைச் செலவு செய்கிறார்கள். அடிப்படைப் பிரச்சினைகளைச் சரி செய்யத் தவறும் சிலரால் கடைசி வரை குழந்தைப்பேற்றை அடைய முடிவதில்லை. எனவே, பெண்களின் ஆரோக்கியம் குறித்த நிறைய விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

உடல் பருமன் தொடர்பான விடயங்களில் இருந்து இந்தப் பிரச்சினையை அணுகத் தொடங்குவோம். ஆண்களைவிட பெண்களுக்கு அதிகமாக உடல் பருமன் ஏற்படுவதன் காரணம் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்வோம். வேலைக்குப் போகும் பெண்களுக்கு கடினமான வேலை செய்யும் தேவை தற்போது குறைந்திருக்கிறது. பணி மற்றும் வீட்டு வேலை என இரண்டுக்கும் இது பொருந்தும். ஆண்களுக்கும்கூட இது குறைந்திருக்கிறது. இன்னொரு பக்கம், கர்ப்ப காலம் மற்றும் பாலூட்டும் காலங்களில் நிறைய சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுகிறோம் என்ற பெயரில் மாவுச்சத்து உள்ள உணவுகளையே பெண்கள் சாப்பிடுகிறார்கள்.

உடல் பருமனின் விகிதம் இப்போது அதிகமாகிறது. பெண்களின் உடலில் குறிப்பாக Post-pregnancy காலங்களில் நடக்கக்கூடிய மாற்றங்கள் இயற்கையிலேயே அதிகமாக இருக்கும். இன்சுலினுக்கு அடுத்தபடியாக உடலில் கொழுப்பைச் சேகரிக்கும் தன்மை ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனுக்கு உண்டு. குழந்தைப்பேறு அடைந்த பின் நிறைய பேர் உடல் பருமன் அடைவதற்கான காரணம் இதுதான். உடல் பருமன் அடையக்கூடிய தன்மை பெண்களுக்கு இயற்கையிலே அதிகமாக இருப்பதால், கவனமாக இருக்க வேண்டியது அவசியம். அதேபோல ஆண்களைவிட குறைந்த வயதிலேயே அதாவது 25-26 வயதிலேயே பெண்களுக்கு டைப்-2 நீரிழிவு நோய் வந்துவிடுகிறது..

இன்னொரு முக்கிய பிரச்சினை இரத்தசோகை. மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்த இழப்பு காரணமாக ஆண்களைவிட பெண்களுக்கு இரத்த சோகை ஏற்படும் வாய்ப்பு அதிகம். எனவே, அவர்களுக்கு இரும்புச்சத்தின் தேவை அதிகம். 10 வயதிற்குமுன் 8 மில்லிக்கிராம் என்றிருக்கும் இரும்புச் சத்தின் தேவை, மாதவிடாயால் ஏற்படும் இரத்த இழப்பை ஈடுசெய்ய 15 வயதில் 15 மில்லிக்கிராமாக உயர்கிறது. 15 வயதில் இருந்து இரும்புச்சத்தை சரியான அளவில் பார்த்துக்கொண்டால்தான் கர்ப்ப காலம், குழந்தைப்பேற்றுக்குப் பிறகான காலம், தாய்ப்பால் கொடுக்கும் காலங்களில் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கமுடியும். பிறக்கும் குழந்தைக்கும் அந்தச் சத்துக்கள் சென்று சேரும்.

சத்தான சைவ உணவுகளை எடுத்துக்கொள்வது கடந்த 5 வருடங்களுக்குள்ளாகவே 50 சதவிகிதத்திற்கும் கீழ் குறைந்துவிட்டது. அதேபோல் சுண்டல் பயறு வகைகளையும் போதிய அளவில் சாப்பிடுவதில்லை. ஆனால், சத்து என்று நினைத்துக்கொண்டு உலர் பழங்களைச் சாப்பிட்டு உடல் பருமன் அடைவதுதான் மிச்சம். ‘இரும்புச்சத்து குறைவாக உள்ளது, எனவே தினமும் நான்கு பேரீச்சம்பழம் சாப்பிடுங்கள்’ என்று மருத்துவர்களே சொல்வதுதான் வருத்தத்துக்குரிய விடயம். மாற்றம் மருத்துவர்களிடமிருந்து முதலில் தொடங்க வேண்டும். அரசும் இந்த விடயத்தில் விழிப்புணர்வு உருவாக்க வேண்டும்.





Osteoporosis எனப்படும் பலவீனமான எலும்புகள் ஏற்படவும் பெண்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. 25 முதல் 35 வயதிற்குள்ளாக பெண்களின் எலும்புகளுக்கிடையில் அதிக அளவிலான கல்சியம் படிகிறது. 45 வயதுக்குப் பின் மாதவிடாய் நின்ற பிறகு ஏற்படும் ஹார்மோன் மாற்றத்தால் எலும்புகளில் இருக்கக்கூடிய கல்சியத்தின் அளவு வேகமாகக் குறையும். எனவே, எலும்புகளில் படியும் காலத்தில் தொடங்கி பெண்கள் சரியான அளவில் கல்சியம் உட்கொள்வது அவசியம். சிறுவயதுப் பெண்கள் நாள் ஒன்றுக்கு 1200 மில்லிக்கிராம் கல்சியத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். கர்ப்ப காலங்களில் இந்த அளவு 1500 மில்லிக்கிராமாக மாற வேண்டும். 45 வயதுக்குப் பின்னும் 1500 மில்லிக்கிராம் அவசியம். பால், தயிரிலிருந்து கல்சியம் நமக்குக் கிடைத்துவிடும் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் 1200 மில்லிக்கிராம் கல்சியம் கிடைக்க, நாள் ஒன்றுக்கு ஒரு லீற்றர் பால் குடிக்கவேண்டும். பேரீச்சம்பழம் கதைதான் இங்கும். 100 மில்லி டீ அல்லது காபி குடித்துவிட்டு தேவையான கல்சியம் கிடைத்துவிடுகிறது என்று நம்புவது மிகவும் பரிதாபம். இதே 100 கிராம் கீரைகளில் 300 -400 மி.கி கல்சியம் நமக்குக் கிடைக்கிறது. இதே போல 100 கிராம் ராகியில் கிட்டத்தட்ட 350 மி.கி கல்சியம் இருக்கிறது. சோயா, பன்னீர் ஆகியவை இந்தச் சத்து நிறைந்திருக்கும் மற்ற சில உணவுகள். இதுபோன்ற உணவுகளை எடுத்துக்கொள்வதில் பெண்கள் கவனம் செலுத்த வேண்டும்.

முட்டையின் மஞ்சள் கருவே Choline கிடைப்பதற்கான சிறந்த உணவு. ‘முட்டை வில்லன் சைவர்கள்கூட முட்டை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்வதில் தவறில்லை. வாரம் 3-4 முட்டைகளை நம் உணவில் சேர்த்துக்கொண்டால் தேவையான அளவு Choline நமக்குக்கிடைத்து விடும். தினமும் ஒன்று என்றால் இன்னமும் நல்லது. சுத்த சைவர்கள் பால் மற்றும் நிலக்கடலை எடுத்துக்கொள்ளலாம். தற்போது இளம் வயதுப் பெண்களுக்கு டீ-12 என்ற சத்துக் குறைபாடு காரணமாக அதிக அளவு இரத்தசோகையும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. ஈரல் முதலிய அசைவ உணவுகளில்தான் டீ-12 அதிக அளவு இருக்கிறது. சைவர்கள் பால் பொருட்களை எடுத்துக் கொள்ளலாம், அல்லது சத்து மாத்திரைகளை உட்கொள்ளலாம். மேலும், Omega-3 என்ற நல்ல கொழுப்புகளை எடுத்துக்கொள்வதும் அவசியம். மீன், நட்ஸ் முதலிய உணவுகளில் இச்சத்து நிறைந்து காணப்படுகிறது.

பெண்கள் வெயிலுக்கு வருவது குறைவதால் விற்றமின் சத்துக் குறைபாடும் அவர்களுக்கு ஏற்படுவதுண்டு. நண்பகல் 12 மணி முதல் 3 மணிக்கு உள்ளான வெயிலில் குறைந்தது அரைமணி நேரம் சிறு சிறு வேலைகள் செய்யலாம்.

பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் ஒட்டுமொத்த சமூகமும் ஆரோக்கியமாக இருக்கும்.

■






# மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களை மீட்டெடுக்கும் நிலையம் திறந்து வைப்பு!

18 வயதுக்குட்பட்ட பால்நிலையின்மையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் இல்லத்து வன்முறையினால் மன உளைச்சலுக்கு உள்வாங்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் கூடிக்கொண்டே செல்கிறது. அதிலிருந்து அவர்களை விடுபட வைப்பதற்கான பல முயற்சியினை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்று திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் பிரசாந்தினி உதயகுமார் தெரிவித்தார்.

உளவளம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாவட்ட உளவள நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு துளசி புர நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார். கிழக்கு மாகாண ஆணையாளர் றிஸ்வாணி றிபாஸ், உளநல வைத்திய நிபுணர் வைத்தியர் ஹயானி ஜெயவர்த்தன, மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பொறுப்பு வைத்தியர், திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட 7 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். ■

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

# ரணிலின் ராஜதந்திரமா? குள்ள நரியின்...

ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு தேர்தல் செயற்பாடுகள் அடிபணிவது இலங்கை ஜனநாயகம் பாதிக்கப்பட்டுள்ள ஒரு முடமான நோயின் அறிகுறியாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது, புற்று நோயைப் போன்று, சட்டமியற்றும் சபை உட்பட ஏனைய அனைத்து முக்கிய அரச நிறுவனங்களின் உயிர்ச்சக்திகளையும் தின்று, அவற்றை பல வீனப்படுத்தியுள்ளது. 21 ஆவது திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்துவதற்கும் அரச சேவையை அரசியலற்றதாக்குவதற்கும் உதவும் ஒரு முற்போக்கான சட்டமாகப் பாராட்டப்பட்டது. ஆனால், தன்னிச்சையாகச் செயற்பட வேண்டிய தேர்தல் ஆணையம் ஜனாதிபதியின் காலடியில் கிடக்கிறது.

அரசாங்க அச்சகம் ஜனாதிபதி சொல்வதைச் செய்யும் நிலையமாக மாறி உள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் என்பன ஏதோ ஒரு அரசியல் பாதையில் இயங்குகின்றன.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹபுஹின்ன, அரசாங்க அச்சுப்பொறியாளர் கங்கானி லியனகே, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன போன்ற அரச அதிகாரிகளே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சீர்குலைக்க முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டது. அவர்கள் வெறும் கைப்பாவைகள் என்பது இப்போது புரிந்துள்ளது. இலங்கையின் பொருளாதார நிலையை ஜனாதிபதி முன்னிறுத்துகிறார். நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் அனைத்துத் தேர்தல்களையும் காலவரையறையின்றி ஒத்திவைக்கும் வாய்ப்பை நிராகரிக்க முடியாது. ஜனாதிபதி எதிர்பார்க்கும் கடன் கிடைக்கும் வரை எந்த ஒரு தேர்தலும் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை. ■



(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ஓராண்டைக் கடந்த ........

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ஐரோப்பா கண்டத்தில் நிகழ்ந்திருக்கும் மிகப் பெரிய அகதிகள் இடப் பெயர்வாக இந்த நிகழ்வு வரலாற்றில் இடம்பெற்றது.


போரால் உக்ரேனிய மக்கள் மட்டுமல்லாமல், உக்ரைனில் தங்கியிருக்கும் பிறநாட்டு மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, கல்வி, வேலைவாய்ப்புகளுக்காக உக்ரைன் நாட்டுக்குச் சென்றவர்கள் பாதிக்கப்பட்டனர்.

உலகின் மிகப்பெரிய இராணுவங்களில் ஒன்றான ரஷ்ய இராணுவம், உக்ரைனை முழுவதுமாகக் கைப்பற்ற ஒரு சில மாதங்களே போதும் என சொல்லப்பட்டுவந்த நிலையில், தனது தலைநகர் கீவ்வை நெருங்க முடியாதபடி ரஷ்யாவுக்கு மிகப்பெரிய டஃப் கொடுத்தது உக்ரைன் இராணுவம். போர் தொடுத்தது ரஷ்யாதான் என்றாலும்கூட, ரஷ்ய தரப்பிலும் மிகக்கடுமையான பாதிப்புகளை உக்ரைன் இராணுவம் ஏற்படுத்தியது. அதாவது, போர் நடைபெற்ற மூன்று மாதத்தில் சுமார் 25,000 ரஷ்யப் படைவீரர்கள் உயிரிழந்திருப்பதாக உக்ரைன் தெரிவித்தது.

“24,900 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்திருக்கின்றனர். மேலும், 1,110 பீரங்கிகள், 199 விமானங்கள், 155 ஹெலிகொப்டர்கள், 1,900 வாகனங்கள், 2,686 கவச வாகனங்கள், 502 வெடிகுண்டு வீசும் சாதனங்கள், எரிபொருள் டாங்கிகள் என பெரிய அளவிலான ரஷ்யாவின் போர்த் தளபாடங்களை உருத்தெரியாமல் அழித்திருக்கிறோம்” என அப்போதே உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சகம் துணிச்சலாகக் கூறியது. தற்போதைய நிலவரப்படி, ரஷ்யாவுக்குச் சொந்தமான 3,121 பீரங்கிகள், 4,877 வாகனங்கள் மற்றும் எரிபொருள் பீரங்கிகள், 2,104 பீரங்கி அமைப்புகள் அழிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறது.

**உலகளாவிய பாதிப்புகள்:**

உக்ரைன்-ரஷ்ய போர் தொடங்கியபோதே, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய்க்கு 100 டொலருக்கும் அதிமாக உயர்ந்தது. அதேபோல, அத்தியாவசியப் பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்தது. காரணம், உலக அளவில் கோதுமை, பார்லி, சோளம், சமையல் எண்ணெய் ஏற்றுமதியில் ரஷ்யாவும் உக்ரைனும்தான் முக்கிய பங்காற்றி வந்தன. இந்தநிலையில், ரஷ்யா மீது அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் சேர்ந்து சுமார் 5,831 தடைகளை விதித்ததால் ரஷ்யாவின் ஏற்றுமதி, இறக்குமதி பெருமளவு பாதிக்கப்பட்டது. அதேபோல, போர் தாக்கத்தால் உக்ரைனிலும் பாதிக்கப்பட்டது. இதனால் இந்த இரு நாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதியை நம்பியிருக்கும் உலக நாடுகள் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்கொண்டன. குறிப்பாக, ஆபிரிக்க நாடுகள் பெருமளவில் உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொண்டது. கச்சா எண்ணெய் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்றவையே சர்வதேச அளவில் பணவீக்கத்திற்கான முக்கிய காரணமாக அமைந்தது.



இதுகுறித்துப் பேசிய ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், “உக்ரைன், ரஷ்யா இரு நாடுகளும் கோதுமை, பார்லியை 30 சதவிகிதம் உற்பத்தி செய்கின்றன. குறைந்த அளவில் வளர்ச்சியடைந்த 45 நாடுகள் மூன்றில் ஒரு பங்கு கோதுமையை ரஷ்யா மற்றும் உக்ரைனிடமிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து, கோதுமை மற்றும் சோளத்தின் விலை 30 சதவிகிதம் உயர்ந்துள்ளது. கச்சா எண்ணெய் விலை 60 சதவிகிதத்துக்கும் மேலாக உயர்ந்துள்ளது. அதேநேரத்தில் எரிவாயு மற்றும் உரங்களின் விலைகள் இருமடங்காக உயர்ந்துள்ளன. எனவே, ரஷ்ய-உக்ரைன் போரால் உலக அளவில் சுமார் 170 கோடி மக்கள் பசி, பட்டினி போன்ற வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள்” என கவலை தெரிவித்தார். ■




# உலகக் கிண்ணப் போட்டிக்கு போர்த்துக்கலும் ஹெய்ட்டியும் தகுதி பெற்றன




நியூஸ்லாந்தில் நடைபெற்ற பிளே ஓஃப் போட்டிகளில் வெற்றி பெற்ற போர்த்துக்கலும் ஹெய்ட்டியும் முதன் முதலாக மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன.

புதன்கிழமை நடைபெற்ற பிளே-ஓஃப் வெற்றிக்குப் பிறகு போர்த்துக்கல், ஹெய்ட்டி ஆகியன அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து ஆகியன இணைந்து நடத்தும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன.

ஆக்லாந்தில் நடைபெற்ற பிளே-ஓஃப் போட்டியின் குரூப் B பைனலில் சிலியை 2- 0 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றி பெற்ற ஹெய்ட்டி முதல் முறையாக எலைட் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதற்கிடையில், ஹமில்டனில் நடந்த மகளிர் உலகக் கோப்பை பிளே-ஓஃப் போட்டியில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் கமரூனை வீழ்த்தியது.

இங்கிலாந்து, டென்மார்க் மற்றும் சீனாவுடன் குழு D இல் ஹெய்ட்டி இடம் பெறும்.

அமெரிக்கா, வியட்னாம் மற்றும் நெதர்லாந்துடன் குழு A இல் போர்த்துக்கல் இருக்கும். ஜூலை 20 முதல் ஆகஸ்ட் 20 வரை அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும்.

ஹமில்டனில் நடைபெறும் C குரூப் போட்டியில் பராகுவே பனாமாவை எதிர்கொள்ளும் போது போட்டியின் மற்றொரு இடம் வெள்ளிக்கிழமை தீர்மானிக்கப்படுகிறது. ■




# சென்னைக்கு அதிர்ச்சி கொடுத்த பென் ஸ்டோக்ஸ்

சென்னை சூப்பர் கிங்ஸ் வீரரான பென் ஸ்டோக்ஸ் அனைத்து ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளிலும் இடம் பெறமாட்டார் என்ற அறிவிப்பு சென்னை ரசிகர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

ஐ.பி.எல் நடப்பு சீசன் தொடர் மார்ச் 31 ஆம் திகதி தொடங்கி மே 28 ஆம் திகதி வரையில் நடைபெறுகிறது. இந்த முறையும் சென்னை அணிக்கு மகேந்திர சிங் டோனி கப்டனாக செயல்படவுள்ளார். இந்தப் போட்டியுடன், டோனி ஐ.பி.எல் போட்டிகளில் இருந்து விடைபெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மே 14 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டம்தான் டோனி விளையாடும் கடைசி ஆட்டமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. நடந்து முடிந்த ஐ.பி.எல் ஏலத்தில் இங்கிலாந்து அணியின் ஆல் ரவுண்டர் பென் ஸ்டோக்ஸை சென்னை அணி நிர்வாகம் ரூ.16.25 கோடிக்கு ஏலத்தில் எடுத்திருந்தது. டோனிக்குப் பின்னர் கப்டன் பொறுப்பு ஸ்டோக்ஸிற்கு வழங்கப்படலாம் என்று ரசிகர்களும் கிரிக்கெட் வல்லுநர்களும் எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில் நடப்பு ஐ.பி.எல் சீசனின் கடைசி பகுதியில் பென் ஸ்டோக்ஸ் விளையாட மாட்டார் என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளிவந்துள்ளது. அயர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஜூன் மாதத்தில் தொடங்குகிறது. இதில் பங்கேற்பதற்கான பயிற்சி ஆட்டங்களில் விளையாடவுள்ளதால், பென் ஸ்டோக்ஸ் ஐ.பி.எல்லின் கடைசி சில ஆட்டங்களில் இடம்பெற மாட்டார் என தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனால் சென்னை அணியின் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இருப்பினும், இது தொடர்பாக அதிகாரபூர்வ தகவல் ஏதும் வெளியாகவில்லை. ■

# கப்டன் வீட்டில் ஒன்று கூடிய 1983 உலகக் கிண்ண வீரர்கள்

பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் வர்ணனையாளராக இருந்து வரும் ரவி சாஸ்த்ரி, சுனில் கவாஸ்கர் ஆகியோர் டெல்லியில் உள்ள கபில்தேவ் வீட்டுக்குச் சென்று நேரத்தை செலவிட்டுள்ளனர். இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் மூன்று நாளிலேயே முடிவுற்ற நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இந்தச் சந்திப்பின் புகைப்படங்களை சுனில் கவாஸ்கர், ரவி சாஸ்த்ரி ஆகியோர் தங்களது இன்ஸ்டாவில் ஷேர் செய்துள்ளனர். இவர்களுடன் மதன்லால், கிருதி அசாத், சுனில் வல்சான் ஆகிய முன்னாள் வீரர்களும் சென்றுள்ளனர்.



“83 உலகக் கிண்ண இந்திய அணி கப்டன் கபில்தேவ் வீட்டில் இந்த அற்புதமான சந்திப்பு நிகழ்ந்துள்ளது. டெல்லி டெஸ்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா பெற்ற வெற்றி சிறப்பான டின்னர், உரையாடல்கள் மூலம் கொண்டாடப்பட்டது. சிறப்பான மாலைப் பொழுதாக அமைந்தது” என்று இந்தச் சந்திப்புக் குறித்து கவாஸ்கர் தனது இன்ஸ்டா பதிவில் தெரிவித்துள்ளார்.

1983 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா பெற்ற வெற்றியானது கிரிக்கெட்டில் மிகவும் சிறப்பு வாய்ந்த வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. 183 ஓட்டங்கள் என மிகவும் குறைவான ஸ்கோர் எடுத்திருந்தபோதிலும் ஜாம்பவான் வீரர்களுடன், பலம் வாய்ந்த வெஸ்ட் இண்டீஸ் அணியை 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் முறையாக உலக சம்பியன் பட்டத்தை வென்றது இந்தியா.

அந்த உலகக் கோப்பை வெற்றியானது முதல் முறையாக வெஸ்ட் இண்டீஸ் அணி இல்லாமல், வேறொரு அணி பெற்ற முதல் வெற்றியாக அமைந்தது.

அந்த அணியில் இடம்பெற்ற வீரர்களில் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் இந்திய அணி தேர்வுக்குழு தலைவராக இருந்தார். அவர் தலைமையில் தேர்வு செய்யப்பட்ட அணிதான் மீண்டும் 2011 ஆம் ஆண்டில் உலகக் கோப்பை வென்றது. ரவி சாஸ்த்ரி இந்திய அணி பயிற்சியாளராகவும் புகழ் பெற்றவர் பாவனையாளராகவும் இருந்து வருகிறார். கவாஸ்கர் வர்ணனையாளராக இருக்கிறார்.

அணியின் கப்டனாக இருந்த கபில் தேவ்வும் இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார். இதேபோல் மோனிந்தர் அமர்நாத், மதன்லால், சையத் கிர்மானி உள்ளிட்டோரும் பி.சி.சியை முக்கிய பொறுப்புகளில் இருந் துள்ளனர்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் இந்திய கிரிக்கெட்டுக்கு தங்களது பங்களிப்பை வெளிப்படுத்தி வரும் இவர்களின் சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 25.02.2023 அன்று வெளியிடப்பட்டது.